## உவெஸ்லி உயர்தர பாடசாலை
## கல்முனை

WESLEY HIGH SCHOOL
UTMOST FOR THE HIGHEST




# கண்ணோட்டம்

## க. பொ. த (உ/த)
## மாணவர் தின விழா - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உவெஸ்லி உயர்தர பாடசாலை
## கல்முனை

# கண்ணோட்டம்

**க. பொ. த (உ/த)**

**மாணவர் தின விழா - 2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லி உயர்தர பாடசாலை,
# கல்முனை.

## க. பொ. த (உ/த) மாணவர் தின விழா –2020

காலம்
**09-10-2020**

இடம்
**நல்லதம்பி மண்டபம்**

தலைமை
**திரு. செல்லத்தம்பி கலையரசன்**
கல்லூரி அதிபர்

பிரதம அதிதி
**திரு. எஸ். புவனேந்திரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்
கல்முனை வலயம்.

கௌரவ அதிதி
**திருமதி. கே. ஜெயந்திமாலா**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல்
கல்முனை வலயம்

சிறப்பு அதிதி
**திரு. எஸ். சரவணமுத்து**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கல்முனை தமிழ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

எந்தையே உம் ஊழியர்
எழுப்பிய கூடம்
உந்தயையாலே பாலர்
உற்றார் ஆசி கிரீடம்
பந்த சித்தியாம் கிருபை
பாதை தன்னில் காணும்
இந்த நேரம் அன்னாரோ
டேத்துவோமும் நாமம்

ஓய்வு அற்று மாறியே
ஓடும் மோன ஆண்டு
தேய்வற்ற புது முக
தோழர் தந்த தீண்டு
மாய்வு தோன்றமறந்தார்
மன்னுந் திடம் பயம்
ஓய்ந்தாலும் மாறா உம்மோ
டொன்றாகிச் சிறந்தார்

நற்றானி யத்தை முன்னோர்
நட்டார் நாம் அறுக்க
பெற்றுப் பின்னோர் விளைவை
பண்ட(க)சாலை சேர்ப்பார்
அற்றை நாள் தரும் பாடம்
உத்தம சேவையாம்
முற்றாய் உயர்ச்சிக்கே எம்
முழு நோக் கன்றாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MOTTO

Utmost for the Highest

அதி உயர்ச்சிக்கான பரிபூரண முயற்சி

## VISION

Quality Education, the key to Success
of Future Generation

தரமான கல்வி எதிர்கால சந்ததியின்
வெற்றிக்கான திறவுகோல்

## MISSION

"Pave the way towards inculcation innovation Skills and enhancing Social Economic Development among Students, to become Useful and Patriotic Citizens in keeping with National Education Policy"

"எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு மாணவர்களைத் தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப நாட்டுப்பற்றுள்ள புத்தாக்க திறன்மிக்க, பயன்மிக்க பிரஜைகளாக திகழ வழிசெய்து கொடுத்தல்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர தின
# வரவேற்புக் கீதம்

அறியாமை இருள் நீக்கி அறிவு வழிகாட்டும்
மறைஞான மேலோர்கள் அன்புடனே வாரீர்

மெஞ்ஞான வாழ்விற்கு உரிய வழிகாட்டும்
உத்தமர்கள் ஒன்று கூடி வாழ்த்துக் கூற வாரீர்

கல்வியின் கரை தொட கல்விக்கூட வாழ்வில்
கடும் முயற்சி புரிந்த எங்கள் காவலரே வாரீர்
(அறியாமை)

உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று நாமும்
உயர்ந்த ஆசீர்வாதம் தந்திடவே வாரீர்

பல்கலைக் கழகம் சென்று பண்புடனே
அகிலம் போற்றும் சீலராக சிறக்க வாழ்த்துத் தாரீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி முதல்வரின் ஆசிச் செய்தி

பள்ளிப் பாடசாலையில், பல காலம் கற்ற கல்வியின் அறுவடைக்காய், பதின்மூன்றாவது வருடத்தில் பரீட்சை எழுத இருக்கும் உயர்தர மாணவர்களின் உயர்தர தின விழா 2020 இல் வெளியிடப்படுகின்ற "கண்ணோட்டம்" எனும் இவ் இதழின் ஊடாக ஆசிகளை கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

இன்றைய இக்கட்டான காலச் சுழலில் இவ்வருடம் உயர்தரப் பரீட்சை எழுத இருக்கும் நீங்கள் பட்ட சிரமங்கள் ஏராளம். கொரோனாவின் தாக்கத்தால், அச்சமடைந்த நிலையிலே தொடர்ந்த கல்விச் செயற்பாடுகள் இருப்பினும் சோதனைகளின் மத்தியிலும் சாதனைகள் புரிந்திட நீங்கள் ஆயத்தமாக வேண்டும். இதற்கு இறைவனின் ஆசீர்வாதம் என்றும் உங்களுக்கு கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

எதிர்காலத்தில் தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமலும் வெற்றியைக் கண்டு அகந்தை கொள்ளாமலும் பண்பு நிறைந்த மனிதர்களாக நற் பிரஜைகளாக தலை நிமிர்ந்து வாழ்தலே கற்ற கல்வியின் பயனாகும். அத்தோடு உங்களுக்காக பல சிரமங்களின் மத்தியிலும் கற்பித்து உங்களின் வளர்ச்சியை காண ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறிக் கொள்கிறேன். மீண்டும் எதிர்கொள்ள இருக்கும் பரீட்சைக்காக வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. செல்லத்தம்பி கலையரசன்**

அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் ஆசிச் செய்தி

கிழக்கிலங்கையில் புகழ் பெற்ற பாடசாலையாகவும், பழம் பெரும் பாடசாலைகளுள் ஒன்றாகவும், பல கல்வியாளர்களையும் அரசியல் தலைவர்களையும் உருவாக்கிய கல்விக் கூடமாக விளங்குகின்ற கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 2020 இன் உயர்தர தின விழாவையொட்டி வெளியிடப்படும் "கண்ணோட்டம்" எனும் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வினைதிறன், விளைதிறன் எனும் இரு சொற்களும் எத்துறைக்கும் உரிய உயரிய மகுட வாசகங்களாகும். கல்வித்துறையிலும் இதுபற்றி பார்க்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. வினைதிறனுடன் கூடிய கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஊடாகசிறந்த விளைதிறன் பெறப்படும். இதில் மாணவர்களும், ஆசிரியர்களும் பங்காளர்களாக செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. இவர்களுடைய வினைதிறனான செயற்பாடுகளே உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறாகிய விளைதிறனை தரப்போகின்றது எனவேசிறந்த பெறுபேற்றைப் பெற வேண்டிய மாணவர்களையும் அதனை எதிர்பார்த்து காத்திருக்கும் ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு இறை ஆசிகளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் நீங்கள் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையோடு இப்பரீட்சைக்கு முகங் கொடுக்க வேண்டியது அவசியமாகும். இப்பரீட்சை உங்களது எதிர்காலத்தையே மாற்றியமைக்கும் போட்டித் தன்மையுடைய பரீட்சையும் கூட அதில் வெற்றிபெற தன்னம்பிக்கை அவசியம். பதட்டமோ, பயமோ கொள்ளத் தேவையில்லை. எனவே மாணவர்களே தன்னம்பிக்கையோடு சென்று வென்று வாருங்கள் நாளைய உலகம் உங்கள் கரங்களில்.

**திரு. S. புவநேந்திரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ அதிதியின் ஆசிச் செய்தி

137 அகவைகளைக் கடந்து தலைநிமிர்ந்து செழுமை பெறும் உவெஸ்லி உயர்தர பாடசாலையின் "உயர்தர மாணவர்களால் 2020" இல் பிரசவிக்கப்படும் "கண்ணோட்டம்" சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்கும் பேறுபெற்று பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்களது கல்விச் செயற்பாடுகள், இணைபாடவிதானச் செயற்பாடுகளின் உன்னத வெளிப்பாடே இத்தகு நிகழ்வுதள் எனலாம். வருடா வருடம் எவ்வித பின்னடைவுகளுமின்றி செயற்பட்டு வரும் மாணவர்களின் பல்துறை ஆற்றலையும் பகரும் படைப்புக்கள் ஆசிக்கு உரியவை.

13 வருடம் தாம் தடம் பதித்து நடந்து வந்த பாதையின் இலக்கை அடையும் இறுதித் தருணம் மாணவர் ஒவ்வொருவரும் தாம் கற்ற பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் அறுவடைக் காலம். இக்காலத்தை முழுமையாகப் பயன்படுத்திப் பரீட்சைக்கு முகம் கொடுத்து வெற்றி பெறுவீர்களென மனதார வாழ்த்துகின்னேற்

இம்மாணவர்களது கல்விச் செயற்பாடுகள், இணைபாடவிதானச் செயற்பாடுகள் சிறப்புற ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வழிப்படுத்திய அதிபர், பிரதி அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் யாவரையம் வாழ்த்துவதில் புளகாங்கிதம் கொள்கின்றேன். வாழ்க்கையின் சவால்களை தகர்த்தெறிந்து பரீட்சையில் வெற்றி கொண்டு எதிர்காலத்தில் நாட்டின் நற்பிரஜைகளாகப் பிரகாசிக்க ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

நன்றி

**திருமதி. K. ஜெயந்திமாலா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல்
வலயக்கல்வி அலுவலகம்
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு அதிதியின் ஆசிச் செய்தி

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் 2020 ஆம் அண்டு கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் விடுகை தின விழாவின் போது வெளியிடப்படும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன். முதலில் இவ்வருடம் உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் ஐயம் தெளிவுறக் கற்றவற்றை பரீட்சையில் திருப்திகரமாக எழுதி சிறந்த பெறுபேற்றைப் பெற்று அவர்களினுடைய இலக்கு நோக்கி நகர்ந்து பல்கலைக்கழகம் நுழைந்து அறிவாற்றலுடன், ஒழுக்க விழுமியம் கொண்ட ஒரு சிறந்த பிரஜையாக வெளிவர வேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமை கொள்கிறேன்.

" ஞானம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின் "

எனும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயற்பட்டால் உலகம் கூட கைக்குள் வந்து விடும். எனவே, உங்களுக்கு கிடைக்கத்தக்க கல்வியை கற்கும் காலத்தில் கற்றால் வெற்றிப் பாதையில் வீறு நடை போட முடியும் என்பதும் யதார்த்தமான உண்மையாகும்.

உயர்தரம் வரை ஒழுக்கத்துடனான கல்வியை பயின்ற தாங்கள் பல்கலைக் கழகம் சென்று உயர்கல்வியை தொடருகின்ற போது தாங்கள் ஒழுக்கத்திலிருந்து நழுவி விடக்கூடாது என்றும் அது நீங்கள் தொழில் வாய்ப்பைப் பெற்று சேவையாற்றுகின்ற போது அவை உங்களுக்கு பின் தொடரும் என்றும் இல்லாவிடில் பல்கலைக்கழக கல்வியை இடை நடுவில் கைவிட்டு தொழில் வாய்ப்பை இழந்து சமூகத்திற்கு பொருத்தமற்ற நிலைக்கு தள்ளப்படுவீர்கள் என்பது எனது அறிவுரையாகும். இலச்சியத்தை அடைய இறையருள் கிட்ட வேண்டும் என மீண்டும் ஒரு முறை வாழ்த்தி எனது ஆசிச் செய்தியை நிறைவு செய்கிறேன்.

**திரு. S. சரவணமுத்து**
கோட்டகல்விப் பணிப்பாளர்
கல்முனை தமிழ் பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபரின் ஆசிச் செய்தி

# Missive of wisH

***' Wisdom is a fountain of life to wisE '***

**Congratulation on the idyllic GCE (A/L) day 2020 !**

I delight that I am capable to offer my approbation for the work that you '***2020***' have been able to do over these 13 years of schooling. Kalmunai ' Wesley ' in its **137th** year of obsessive service of brilliance in '**Education**' is also joy to extend its best wishes to you on this ecstatic day.

I declare that ' ***COVID – 19*** ' cannot be a barrier to your studies. Delete this concept from your mind right now and face the exam confidently. You are inordinate blessed for getting more days to your learning due to '***CORONA***'. It is undoubtedly positive and an excessive symptom for your success. By the way, it is palpable that you are in close vicinity to a fangled life. In addition you have been well made by the professionals of ' **WESLEY** ' for a optimistic future. Keep it up.

Education for pay is of the key goal of students at present. The world theoretically waits for a countless revolution. You are the promises of tomorrow. Sri Lankan tutoring is the greatest and a well-recognized cover up in the cosmos. You should not basically depend on overseas studies. This drift should be wiped out at the stage. Your only motto at this phase is to choose apt trainings for any type of supports fitting to you in and out of the motherland. This should be the only challenge of your life at present. Soon after an ultimate amount, you can apprise your tutoring time to time according to your needs.

I resolutely pledge that the ' **Mission** ' of the **Great Historic College** will certainly tangle each of your life plinth.

***'Acquire from yesterday, Animate for today, Confident for tomorroW '***

**SThevachandra**
( Deputy Principal )

***GOOD LUCK!***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி அதிபரின் ஆசிச் செய்தி

கல்முனை கல்வி வலயத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பல கல்விமான்களை உருவாக்கிய உவெஸ்லி உயர்தர பாடசாலையிலிருந்து இவ் ஆண்டு (2020) க.பொ.த. உயர்தப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை வாழ்த்தி உயர்தர மாணவர் தினத்தில் வெளியிடப்படும் "கண்ணோட்டம்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகை கொள்கிறேன்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையானது ஒரு போட்டிப் பரீட்சையாகவும், ஒரு தடைதாண்டல் பரீட்சையாகவும் காணப்படுகின்றது இப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகம் செல்ல வேண்டுமாயின் விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் தேவை பல மேதைகளும், கல்விமான்களும், விஞ்ஞானிகளும் பல தோல்விகளுக்கு பின்பே வெற்றியடைந்தார்கள். முதல் தடைவையிலேயே க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைய முயற்சி செய்யுங்கள். தவறினால் மீண்டும், மீண்டும் முயற்சி செய்யுங்கள் நிச்சயம் வெற்றியடைவீர்கள் என்று உங்களை வாழ்த்துவதோடு உங்கள் கனவை நனவாக்க அர்ப்பணிப்புடன் நல்வழி காட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும், பகுதித் தலைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. S. சிவாகரன்**
உதவி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதித் தலைவரின்ஆசிச் செய்தி

137 வருட பழைமை வாய்ந்ததும் கல்முனை கல்வி மாவட்டத்தில் முக்கியமான ஓர் இடத்தில் அமைந்துள்ள பிரபல முண்ணனி பாடசாலைகளில் ஒன்றான கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் A/L தின விழா மலர் கண்ணோட்டத்திற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைக்கின்றேன்.

2020ஆம் ஆண்டு பெரும் சவால்களுக்கு மத்தியில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் நீங்கள் 2011 இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை மற்றும், 2017 இல் நடைபெற்ற O/L பரீட்சை போன்றவற்றில் சிறந்த பேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தது போல் இம்முறை நடைபெறுகின்ற உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பெருமைசேர்க்க வேண்டுமென நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் இப்பாடசாலையில் இருந்து வெளியேறும் ஒவ்வொரு மாணவர்களும் இப்பாடசாலையின் பாரம்பரியத்தையும், ஒழுக்கவிழுமியங்களையும் பேணிப்பாதுகாப்பதுடன் நாட்டிற்கு ஏற்ப நற்பிரஜைகளாக மிளிரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

எமது மாணவர்களை நெறிப்படுத்திய அதிபர், பிரதி அதிபர, உதவி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நலம்விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன் உயர்தரதின விழா சிறப்பாக நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி.** S.Z.M. **அபூபக்கர்**
பகுதித்தலைவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதித் தலைவரின்ஆசிச் செய்தி

உலகம் முழுவதும் பரவியுள்ள கொரோனா நோய் தொற்று மக்களின் அன்றாட வாழ்க்கையை பாதித்துள்ளது. இந்த வகையில் பாடசாலைகள் மூடல், தனியார் வகுப்புக்கள் நடைபெறாமை, சமூக இடைவெளி போன்ற பல்வேறு காரணங்கள் மாணவர்களின் கல்வி செயற்பாட்டில் சிக்கலான தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று தற்போது இருக்கும் கல்வி கொள்கை குறித்து மறு ஆய்வு செய்ய வேண்டும் என்பதையும், மறு கட்டமைப்புக்கள் உருவாக்கபட வேண்டும் என்பதையும் உலகில் உள்ள கல்வியாளர்களை சிந்திக்க வைத்துள்ளது. இவ்வேளையிலே இதனை செயல்படுத்தும் வகையாக கொரோனா ஊரடங்கு காலத்திலே இணையதளத்தின் ஊடாக ZOOM போன்ற பல்வேறு செயலிகளின் ஊடாக கல்வி கற்று கல்வி வரலாற்றில் என்றுமில்லாதவாறு இம்முறை A/L பரீட்சை எழுதவிருக்கும் நீங்கள் சிறந்த பெறுபேற்றை பெற்று இப்பாடசாலைக்கும் உங்களை கற்பித்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் சமர்ப்பணம் செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

இம்மாணவர்களுக்கு, கல்வியூட்டிய சகல ஆசிரியர்களுக்கும் குறிப்பாக இணையவழி ஊடாக பல்வேறு சிரமத்தின் மத்தியில் கல்வி புகட்டிய ஆசிரியர்களுக்கும், அதற்காக இரவு பகல் பாராது ஆசிரியருக்கு வழிகாட்டிய அதிபர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக நின்ற பிரதி அதிபர், உதவி அதிபர் அனைவருக்கும் இவ்வேளையிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. K. ருத்திரமூர்த்தி**
பகுதித்தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Staff - 2020

| S/No | TITLE | INI | NAME |
|---|---|---|---|
| 1 | Mr | S | KALAIYARASAN |
| 2 | Mr | S | THEVACHANTHIRA |
| 3 | Mr | S | SIVAKARAN |
| 4 | Mr | P | KAMALATHASAN |
| 5 | Mrs | V | ELANGANATHAN |
| 6 | Mrs | S.Z.M | ABOOBACKER |
| 7 | Mrs | S | PARAMALINGAM |
| 8 | Miss | P | BALASUPRAMANIYAM |
| 9 | Mrs | Y | SELVARAJAH |
| 10 | Mrs | MT | ALAGURAJAH |
| 11 | Mrs | S | SHANTHAKUMAR |
| 12 | Mrs | M | GOPALASINGAM |
| 13 | Miss | K | ANNANESAM |
| 14 | Mrs | S | MAHENTHIRARAJAH |
| 15 | Mrs | R | ARULRAJAH |
| 16 | Mrs | V | THIRUNAVUKKARASU |
| 17 | Mrs | J.R. | JEEVAKADACHAM |
| 18 | Mrs | A.J | CHRISTOREX |
| 19 | Mrs | G | SIVA |
| 20 | Mrs | N | AMALANATHAN |
| 21 | Mr | S | RAVINTHIRAKUMAR |
| 22 | Mrs | R | SAYATHARAN |
| 23 | Mrs | I | KULENDRAN |
| 24 | Mr | MAMM | RISHMY |
| 25 | Mrs | V | GANESAN |
| 26 | Mrs | B | CHANDRAKUMAR |
| 27 | Mrs | P | ITHAYARAJAH |
| 28 | Mrs | R | ALLIES |
| 29 | Mr | T | VILVARAJAH |
| 30 | Mrs | M | SANMUKARAJAH |
| 31 | Mrs | S | SEKAR |
| 32 | Mrs | M | RANGARAJAN |
| 33 | Mrs | S | VATHAMAN |
| 34 | Mrs | T | KOVINTHASAMY |
| 35 | Mrs | M | SURESHKUMAR |
| 36 | Mrs | K | UMAVARAN |
| 37 | Mr | S | UTHAYARAJAH |
| 38 | Mr | G | ALFRED HARAN |
| 39 | Mrs | I | ARULGNANAMOORTHY |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 40 | Mrs | K | SANATHANAN |
| 41 | Mrs | V | VIJAYAKUMAR |
| 42 | Mrs | U | NIMAL |
| 43 | Mrs | C P | JUSTIN |
| 44 | Mrs | L | ARULKANTHARAJAH |
| 45 | Mrs | S | MATHIYALAGAN |
| 46 | Mrs | T | KUMUTHAN |
| 47 | Mr | V | INTHIRAKUMAR |
| 48 | Mrs | P | MANOKARAN |
| 49 | Mrs | R | MARIL MARIYARAJ VAZ |
| 50 | Mrs | S | VISVANATHAN |
| 51 | Mrs | J | MOHAN |
| 52 | Mr | K | RUTHRAMOORTHY |
| 53 | Mrs | N | THAYAPARAN |
| 54 | Mr | K | VIJAYAKUMAR |
| 55 | Mrs | K | JEYARUPAN |
| 56 | Mr | P | RANJAN |
| 57 | Mr | Y | THAVAJEEVAN |
| 58 | Mrs | J | SIVAKARAN |
| 59 | Mr | MSM | NAKEEB |
| 60 | Mr | S | SRITHAKSHAN |
| 61 | Mrs | S | MOHAN |
| 62 | Mr | S | SUTHAKARAN |
| 63 | Mrs | N | THUPAN |
| 64 | Mrs | T | SUBARAJAN |
| 65 | Mrs | Y | BASKARAN |
| 66 | Mrs | M | THAYAPARAN |
| 67 | Mr | T | KARTHEEPAN |
| 68 | Mrs | N | SUTHARSAN |
| 69 | Mrs | S | THARMENTHIRA |
| 70 | Mrs | S | PARTHIPAN |
| 71 | Mr | A | PRINSLY BERNARD |
| 72 | Mrs | K | VIJAYARAKAVAN |
| 73 | Mr | S | PIRATHEEPATHASAN |
| 74 | Mrs | S | THASARATHAN |
| 75 | Mr | K | RAJU |
| 76 | Mrs | S | RUSHIKARAN |
| 77 | MRS | A.L | FATHIMA RISNA |
| 78 | Mrs | I | MARSUTHA SHAMAD |
| 79 | Mrs | MGF | NASRIYA |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 80 | Mr | S | SATHESKUMAR |
| 81 | Mr | NM | JALEEL |
| 82 | Mr | S | SIVARANJAN |
| 83 | Mr | MSM | YASAR |
| 84 | Mrs | J | SRITHARAN |
| 85 | Mrs | K | SIFRA |
| 86 | Mr | MVM | SHAJATH |
| 87 | Mrs | SL | RIZWANA |
| 88 | Miss | K | NITHARSHIKA |
| 89 | Miss | MBN | SUJA |
| 90 | Mr | MSM | JIHATH |
| 91 | Miss | N | THANUSHIYA |
| 92 | Mrs | S | KUMANAN |
| 93 | Mrs | SM | SANGEETH |
| 94 | Mr | A | JITHARTHANAM |
| 95 | Mrs | HM | SITHY JAMANIYA |
| 96 | Mrs | SJS | HUSSAIN |
| 97 | Mrs | S | JEYAKUMAR |
| 98 | Mrs | D | SATHESKUMAR |
| 99 | Mrs | V | URUTHIRAN |
| 100 | Mr | I | SHANTHIRAKUMAR |
| 101 | Mr | S | PIRATHEEPAN |
| 102 | Mr | | MAKESWARAN |
| 103 | Miss | S | PIRAPAKARAN |
| 104 | Mr | MMH | NAJJAS |
| 105 | Mrs | S | NIROSHAN |
| 106 | Mrs | D | KOGULATHEEPAN |
| 107 | Mrs | T | THEVAKUMAR |

## Non Acadamic Staff

01. Mr. S. M. Farsath
02. Miss. J. Grace
03. Mr. J. Balasundaram
04. Mrs. T. Sivakumar
05. Mr. N. Thivviyakumar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Science Stream Teachers

| | |
|---|---|
| Biology | Mrs. V. Elanganathan, Mrs. S. Rusiharan |
| Com. Mathematics | Mr. K. Ruthramoorthy, Mrs. J. Sritharan<br>Mr. A. Jithathanam |
| Physics | Mr. S. Uthayarajah, Mr. M.S.M. Jihath |
| Chemistry | Mrs. S.Z.M. Aboobucker, Mrs. S. Jayakumar |
| Agro Science | Mr. P. Ranjan |
| GIT | Mr. S. Piratheepathasan, Mrs. Nasriya Malik |
| General English | Mr. M. Rangarajan, Mr. S. Ravindrakumar |

## Technological Stream Teachers

| | |
|---|---|
| Engineering Technology | Mr. Y. Thavajeevan |
| Bio System Technology | Mrs. P.Balasupramaniyam |
| Science for Technology | Mrs. V. Elanganaathan<br>Mrs. S.Z.M. Aboobucker<br>Mr. K. Ruthramoorthy<br>Mr. S.Uthayaraja<br>Mr. S.Imthiyas |
| ICT | Mrs. M.G. F. Nasriya |
| Agriculture | Mr. P. Ranjan |
| Mathematics | Mr. M.S.M. Jihath |
| English | Mrs. Sifra,<br>Mrs. R. Mariyaraj Vaz |
| GIT | Mr. M.G.M.Nasrijya |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Commerce Stream Teachers

| | |
|---|---|
| Business Studies | Mrs. K. Umawaran,<br>Mr. V. Indrakumar |
| Accounting | Mrs.S. Visvanathan,<br>Mr. K. VijayaKumar |
| Economics | Mrs, L. Arulkantharaja |
| GIT | Mr. S. Piratheepathasan |
| English | Mrs. M. Rangarajan |

## Arts Stream Teachers

| | |
|---|---|
| Tamil | Mrs. S. Mahenrarajah, Mr. I. Chanthirakumar |
| Political Science | Mr. T. Kartheepan |
| Logic | Mrs. Y. Selvarajah, Mrs. J. Mohan |
| Agro Technic | Mrs. B. Chandrakumar |
| Drama & Theartre | Mrs. R. Allis, Mrs. V. Urithran |
| Music | Mrs. K. Vijayaragavan,Mrs. S. Srithaksan |
| Dance | Mrs. M. Sureshkumar, Mrs. N. Thayaparan<br>Mrs. S. Tharmendran, |
| Art | Mr. S. Srithaksan |
| Christianity | Mrs. A.J. Christorex, Mr.G. Alfred Haran |
| Hindu Culture | Mr. A. Maheswaran, Mrs. D. Kokulathepan |
| Islam | Mr. N.M. Jaleel |
| Home Economics | Mrs. N. Amalanathan |
| Grography | Mrs. S. Kumanan |
| History | Mrs. P. Manokaran |
| GIT | Mr. S. Piratheepathasan, Mrs. Nasriyamalik |
| English | Mrs. I. Marsutha Samad, Mrs. Risna |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Name of Science Students (2020 Batch)



**Name of Bio Students**


01. R. John Quinton 02. G.Thadsithan 03. P. Venupragash 04. Y. Kugathasan 05. M. Lasanth 06. S. Anojika 07. R. Daneesha 08. P. Lenusha 09. T. Kithustika 10. Y. Somikka 11. A.M. Asrifa 12. T. Kishomi

**Name of Maths Students**

01. S. Venukumar 02. K. Sabarniya 03. R. Thilsha04. S. Darshika 05. R. Thuresha 06. P. Jathushana


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Name of Commerce Students (2020 Batch)



01. S. Sujithkar 02. S. Rujithan03. J. Mathusanth 04. K. Janu 05. S. Thurkkajini


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Name of Technology Students (2020 Batch)



01. V. Kathursan 02. T. Pravin 03. G. Nithurshan 04. S. Niroshan 05. S. Mithurshan 06. J. Shanjaian
07. M.M. Dammikka Thushara 08. J. Abiluxsan 09. A. Amarnath 10. A. Harishan 11. M.K. Mohamed Asath
12. T. Sahan 13. I. Disharkan 14. T. Sukes 15. M. Lakshanth 16. B. Mohamed Sujah
17. M. Kirujanan 18. S. Siyam 19. S. Thanusiyan 20.T. Janukshan 21. S. Abimanyu 22. S. Archana
23. M. Shanuja 24. V.T. Roshani 25. A.A.F. Suhatha 26. M.J.F. Nuska 27. S. Kenista 28. P. Dilogini
29. N. Kishoni 30. S. Thusya 31. M. Stela 32. S. Thanujah 33.R. Kishomiya 34. S. Thasanicka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Name of Arts A Students (2020 Batch)



01. K. Sakthees 02. P. Richan 03. S. Harishan 04. S. Sihani 05. A. Henuja 06. M. Thanushin 07. S. Vithursana 08. V. Inukanjani 09. A.K. Hafna Banu 10. V. Vithusa 11. S. Lojana 12. K. Jeevarani 13. S. Jathurshaka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Name of Arts B Students (2020Batch)



01. S. Jathushan 02. R. Tharshan 03. S. Viththiyanath 04. T. Thanustikan 05. K. Thavapiriyan 06. K. Vijith 07. Y. Kaviniya 08. S. Jathusika 09. G. Vithusha 10. M. Anushikka 11. N.J. Monisha 12. T. Kinushanika 13. N. Abinaya 14. T. Lukshika 15. S. Harisha 16. P. Lithuja 17. E. Kethusha 18. E. Danusika 19. T. Thassika



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Students Who are Selected for The University

**1979**

| | |
|---|---|
| Medicine | K. Kumuthini |
| Engineering | M. Kirupaharan |
| Law | T. Thamilarasan |
| Physical Science | S. Pirnavasoathi, S. Satkunamalar<br>M. Vasanthakumari |
| Commerce | S. Ganesamoorthy |
| Arts | T. Ariyamalar, V. Vvarnakulasingam<br>P. Thusyanthini, S. Potselvi<br>S. Malini, M.Komethagam |

**1980**

| | |
|---|---|
| Medicine | A.G. Thevaranjan |
| Engineering | P. Sivasithamparam |
| Law | S. Mohamed Jameel |
| Physical Science | S.Rasambikai, S.venuga |

**1981**

| | |
|---|---|
| Medicine | P. Arulpragasam, S. Chanthirapalan |
| vetinery Science | M.A.M. Fazie, M.C.M. Junaid |
| Physical Science | J. Annanavaparathi, S. Kumuthini<br>S. Shanthidevi |
| Management | V. Rubaskaran |
| Agriculture | M.M.M.Fazeel |

**1982**

| | |
|---|---|
| Medicine | M. Mathiyalagan |
| Engineering | I.L Ameenul Bari, G. Baskaran<br>G. Jeyamohan, T. Jeyamohan<br>N. Vemalarajah |
| Physical Science | S. Murugathas, T. Subarajan<br>M. Vasanthakumari |
| Agriculture | S.Siyamalagowry, S. Kalaranjiny |
| Arts | S.Jeevarajah,S.Punitham,K.Kalavathy<br>K.Thurairajasingam, K.Santhakumary<br>K. Selvarany, P. Kunaratham |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1983**

| | |
|---|---|
| Medicine | S. Vamathevan |
| Engineering | A.Ahamed Satheek, V.Nanthini |
| Dental Science | N. Santhimathi |
| vetinery Science | R. Sathiyathevi |
| Agriculture | M.C. Jeya |
| Physical Science | K.Sugumar, S. Puvinojini<br>M.Pathamaranjini |
| Arts | A. Antony Rajan, K. Sugirtharani |

**1984**

| | |
|---|---|
| Engineering | N. Nanthananthan, T. Thayaesvaran<br>N. Thyaparan |
| Management | K. Ithayarajah |
| Agriculture | M.Puspalatha |
| Arts | P.K.Mariyamanagalam |

**1985**

| | |
|---|---|
| Medicine | A. Thusitha, M.C.M. Mahir |
| Engineering | T. Sivayogam, N. Miyhulananyhan |
| Bio Science | G. Jayasanthy |
| Physical Science | U.A. Naziar, V. Pakkiyarajah |
| Commerce | T. Baskaran |
| Arts | A.M. Jiffry, M.Y.M. Najeem |

**1986**

| | |
|---|---|
| Medicine | S. Sujikalathevi, N.Ramesh, M.I. Irsath |
| Engineering | U.L.A. Nazar |
| Bio Science | A.Zeenathul Marjoon, E.Jekatheesvary<br>T. Kamarajan, P. Suventhiran |
| Physical Science | K. Baskaran, G. Suraganan |
| Arts | A.Satheek, T.Thayalan |

**1987**

| | |
|---|---|
| Medicine | Y. Ubaithullah |
| Engineering | K. Baskaran, |
| Bio Science | R.Mathiyalagan, A.H.MohamedAmeen |
| Agriculture | R.Sivanesan |
| Arts | S. jayaranjanee,N.Jayanthini, A.Nalim<br>S. Mohanaraj, S. Santhirasegaram |
| Law | K. Ravindran |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1988**

| | |
|---|---|
| Medicine | M.H.Vajna |
| Physical Science | T. Paramanatham |
| Bio Science | S. Muralitharan, S.Sumanthinithevi |
| | A.H. Ameen, T. Ketheesan |
| commerce | S. Pramaharan, R. Thirunavukarasu |
| | S. Ravichanthiran, S. Thevethuyan |
| Arts | M. Lakkumam |

**1989**

| | |
|---|---|
| Medicine | M. Sujatha |
| Engineering | V. Ravindran |
| Bio Science | T.Ketheesan |
| Commerce | K. Sivakumar |
| Physical Science | K.Kovannan, V. Thevakumar |

**1990**

| | |
|---|---|
| Engineering | M.B. Rauf |
| Bio Science | Y.I.Shajafullah |
| | S. Mythili, M.Y.M. Satheek |
| Commerce | S. Uthayakumar |
| Arts | K. Thankaththurai, S. Sivarajah |

**1991**

| | |
|---|---|
| Medicine | Y.I.Sajafullah |
| Engineering | M.B. Rauf |
| Bio Science | S.Sivathasan |
| Physical Science | A. Kaleelur Rahman |

**1992**

| | |
|---|---|
| Medicine | S. Sivathasan |
| commerce | K. Lingesvaran, S. Varatharajah |
| | M.Mohanathas |
| Arts | P. Sachithanantham, P.Arunakrinathan |

**1993**

| | |
|---|---|
| Medicine | T. Vinothini |
| Agriculture | V. Rajenthra Kumar |

**1994**

| | |
|---|---|
| Engineering | S. Jeyarajah |
| Physical Science | P. Kalyani |
| Bio Science | G. Sumbaththijra |
| Commerce | S. Vimalarajah, S. Jeyapalan |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1995**

| | |
|---|---|
| Medicine | K. Suthesvary |
| Management | M. Kulasegaram |
| Arts | R. Ganesan, S. Chanthirakumar |

**1996**

| | |
|---|---|
| Physical Science | S. Uthayarajah |
| Management | K. Thiruchchelvam |
| | T. Vijayakumar |
| Arts | N. Sabesan |
| | S.Mathivathani |

**1997**

| | |
|---|---|
| Engineering | T. Thavarajah |
| Physical Science | S. Uthayarajah |
| Bio Science | S. Kirupananthan |
| Management | P.B. Navarajah |

**1998**

| | |
|---|---|
| Physical Science | S. Partheepan, A. Sathees Kumar |
| Arts | T. Utthayajeevamalar |
| | A. Arunthavarani |

**1999**

| | |
|---|---|
| Management | S. Mugunthan |
| Commerce | A.P Gunapalan, K. Vimeleshvaran |
| | T. Uthayakumar |
| Arts | S. Premavathani |

**2000**

| | |
|---|---|
| Physical Science | M. Jayakanthan, T. Kandeepan |
| | S. Sathees Kanthan, A. Thivakaran |
| Commerce | P. Jeyamalini |
| Arts | S. Srikaran, C. Premini |

**2001**

| | |
|---|---|
| Physical Science | M. Jayakanthan |
| Arts | S. Logesvaran, A. Mathusoothanan |

**2002**

| | |
|---|---|
| Medicine | M. Prasath |
| Bio Science | P. Thusitharan |
| Physical Science | S. Pothirajah, N. Suresh, R. Thusiyanthan |
| Arts | P. Thayalini, K. Rasikala, S. Satheepavani |
| | S. Ranjini, K. Mohanathas |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2003**

| | |
|---|---|
| Bio Science | S. Raguvaran |
| Physical Science | K. Rahini |
| Commerce | G. Prasanthan |
| Arts | P. Kamalarajah, I. Sasikala, M. Lillymalar |

**2004**

| | |
|---|---|
| Physical Science | M. Mohanarajah |
| Arts | S. Rupavani |

**2005**

| | |
|---|---|
| Arts | S. Kalaimath, T. Kala |

**2006**

| | |
|---|---|
| Bio Science | P. Manchereka |
| Commerce | P. Priyatharsan |
| Arts | T. Silogini, T. Kirushnavani, P. Rajeesh |

**2007**

| | |
|---|---|
| Quantity Survering | P. Jerusan |
| Agro Science | P. Manchireka |
| Animal Science | M. Jalini |
| Physical Science | S. Pragalathan |
| Arts | S. Thieepan, N. Rajkumar |
| | S. Kalista Cowsalya, V. Santhirakanthy |
| | M. Mathura, S. Sowmiya, K. Sutharsan |

**2008**

| | |
|---|---|
| Medicine | T. Mythry |
| Siddha Medicine | V. Varuna |
| Agriculture | M. Pagirathy |
| Bio Science | K. Bhanuga, E. Niluksana |
| Physical Science | P. Thadshyan, T. Dinesh |
| Arts | T. Kumuthini, S. Pratheepa, Y. Anitha |
| | K. Sangika |

**2009**

| | |
|---|---|
| Medicine | S. Thiluxie |
| Bio Science | T. Hemapriya |
| Eingineering | K. Kishakatheesh |
| Surveyoring | T. Dinesh |
| Physical Science | R. Ramanathas, M.Pavirajah |
| Arts | N. Ketheesvaran, N. Kopiga |
| | S. Kiruthithiga, Y. Vinotharsan |
| | P. Rajipalan, R. Suganya |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2010**

| | |
|---|---|
| Physical Science | K. Thaseepan |
| MIT | G. Nisanthini |
| Commerce | S. Shanathan, T. Pirakash |

**2011**

| | |
|---|---|
| Medicine | P. Kethujan |
| Siddha Medicine | S. Sanjala |
| Engineeirng | T. Elanthika |
| Physical Science | M.I. Fathima Akeela |
| Management | S. Puspakanthan |
| Arts | R. Kajenthini, J. Mahinthini, K. Sathana |
| | S. Niroja, V. Nalini, J. Dilakshika, K. Sinthu |
| | P. Puviraj, S. Mirna Jenifar |

**2012**

| | |
|---|---|
| Medicine | P. Titus Sanjay |
| | E. Mithuran |
| | N. Upenthiran |
| Siddha Medicine | M. Vanisiri |
| Architecture | \|R. Kavilan |
| Arts | S. Thevika, T. Thiviya, K. Thusanthini |
| | L. Sanuraj, M. Laksini, Tharmitha |
| | R. Kejenthini, S. Thushalini |

**2013**

| | |
|---|---|
| Siddha Medicine | S. Derjan, K. Dinosini |
| Unani Medicine | P. Praveenan |
| Quantity Surveying | A. Jayshanth |
| | R. Logithan |
| ICT | S. Pratheesan |
| Management | N. Sutha, T. Prasanth |
| Arts | M. Sinthana, I. Thusyanthi |
| Art & Design | A.R.M. Hathe |
| Sports Science Mgt | L. Thanushiya |

**2014**

| | |
|---|---|
| Surveying | M. Jathursan |
| ICT | A.P Nivetha |
| Bio Science | V. Thenuka |
| Arts | N. Diashika, S. Sanjutha |
| | J. Jayaladchumi, R. Varathaledchumi |
| | K. Pavithra, S.K. Deliciya |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015

| | |
|---|---|
| Medicine | S. Kugadarshi |
| Physical Science | S. Hishobaba |
| Commerce | \|Y. Rajitha, G. Thusanthan |
| Arts | K. Tipogini, J. Anusiya, A. Viruthika, L. Thurshana,K.Thanusha, J. Rokshana S. Tharsika, J.Shomika,N.Kalpanakumar |
| Management | S. Thathusana |
| Archologe | S. Sayanthakumari |
| Drama | S. Tharsika |

## 2016

| | |
|---|---|
| Engineering | T. Niluksha |
| Management | S. Subosana |
| Law | P. Thuvaraka |
| Peace & Revolution | T. Dhailakshini |
| MIT | M.Vithyajini |
| Arts | M. Mithursana, T.Thivya, N.Nilany Y. Jeeritha, N. Kokulraj, P. Janojini, K. Gajenthairan |
| Dnace | T. Kugalya |
| Art | N. Janushan |
| Drama | P. Niloshini |

## 2017

| | |
|---|---|
| Engineering | L. Prakavi |
| Medicine | A.K.M. Afkar |
| Law | J. Kishor |
| Peace& Revolution | V. Sujanthan |
| Management | Y. Anojan |
| Commerce | V. Arthini |
| Dance | S. Thasankika |
| Drama | S. Vimalatharshan I. Mesha |

## 2018

| | |
|---|---|
| Engineering | K.Vinojith, A.Januprian |
| Medicine | E. Nishahari |
| Agro | S. Harijeyani, N. Sahithiya, K. Viyukshana |
| Bio Science | S. Virushani, A.R.F. Safrin |
| Applied Science | U. Harithas, |
| Physical | K. Gobi Kathees |
| Arts | M. Lathusiya, N. Niluxi, V. Kousalyajeevani |
| Musice | K. Sathursini |
| Dance | U. Samruthi, R. Ajantha, N. Aaranikka, A. Madusiya |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் அவசியம்

செல்வத்துள் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும். கல்வி நம் வாழ்வில் முக்கிய பங்காற்றுகிறது. கல்வி கற்று வாழ்க்கையில் வளம் பெறுவதற்காகப் பள்ளிக்கு செல்கிறோம். நாம் வாழ்வில் எவ்வளவு கற்கின்றோமோ அந்த அளவுக்கு தான் அறிவும் வளரும். மனிதனின் அறிவுக் கண்களை திறந்து வைக்கும் சக்தி கல்வி ஒன்றுக்குத் தான் உண்டு.


அறிவுடைய ஒருவனை அரசரும் விரும்புவர். கரையில்லாத கல்வியைக் குறைவில்லாமல் கற்றால் உலகம் நம்மை போற்றி வாழ்த்தி வணங்கும் எந்தச் சூழலிலும் ஒருவர் கற்ற கல்வியானது புகழுறவும், போற்றப்படவும் கைகொடுக்கும் என்பது திண்ணம்.மேலும், கல்வியில் சிறந்து விளங்கினால் பகைவரும் நட்பு கொள்ள விரும்புவர். இதனால், இந்த உலகமே நம் வசப்படும் என்றும் மொழியலாம். சான்றாக பார்புகழ் வள்ளுவர் மற்றும் அறிவியல் மேதை சேர் ஐன்ஸ்டைன் போன்றோர் தாம் இறந்தும் இறவாத புகழோடு வாழ்கின்றனர்.

கல்வியில் சிறந்து விளங்கினால் பல உயர்ந்த வேலை வாய்ப்புக்கள் நம்மை நாடி வரும். இதனால் மாதந்தோறும் கை நிறைய ஊதியமளிக்கும் ஒரு நல்ல வேலையில் அமரலாம்.தன் குடும்ப, சமுதாய, நாடு மற்றும் உலக மேம்பாட்டிற்கும் இயன்ற ஆக்கச்சிந்தனையும் பொருளுதவியும் வள்ளல் போலும் வாரி வழங்கலாம். மேலும் இன, மொழி, சமய வளர்ச்சிக்கும் உன்னதப் பங்காற்ற முடியும் "வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பதற்கு இத்தகையோரே இலக்கணமாவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எத்தனையோ உயிரினங்கள் வாழ்கின்றன. இருப்பினும் சிறந்த உயிரினமாக ஆறறிவு பெற்ற மனிதனே போற்றப்படுகின்றான். பிற உயிர்களைக் காட்டிலும் மனிதனே உயர்ந்தவனாய் மதிக்கப்படுகின்றான். மதிப்பும், மரியாதையும் கல்வியின் கண். மனிதன் பெற்ற பகுத்தறிவிற்குச் சான்றாகும். இந்த பகுத்தறிவின்காரணமாகவே எது நல்லது, எது கெட்டது என மனிதனால் பகுத்தாய்ந்து செயலாற்ற முடிகிறது. நீரிலிருந்து பாலைப் பிரித்து அருந்தும் அன்னப்பறவை போல கல்வி கற்றவனால் மட்டுமே நல்லவற்றை நாடிச் செல்ல இயலும்.


ஆகவே, நம் வாழ்வின் உண்மை நோக்கத்திற்கு இட்டுச் செல்லும் கல்வியை உயிர் மூச்சைப் போல் போற்றுவோம். "கண்டதைக் கற்க பண்டிதன் ஆவான்" என்பதற்கிணங்க நல்ல புத்தகங்களை நாளும் படித்து அறியாதவற்றை அறிந்து இத் தகவல் யுகத்தில் சிறப்போம்.



**S. Archana**
A/L 2020 Technology Batch
Bio System Technalogy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக் காலம்



சின்னச் சிறகுகளை விரித்து
சித்திரம் பேசிடும் சிந்தை அது
சிக்கி தவிக்கிறது சிட்டாகச்
சிரித்துப் பழகிய பள்ளிக் காலம்
சிறிது நாட்களில் முடிவடைவதை
சிந்தனை செய்யவே
சிலையாக உணர்கிறது என் மனது.

ஆல விருட்சம் தந்திடும்
அழகிய விழுதுகள் அதிலே
அவரவர் குதூகலத்தில் ஊஞ்சல்கள்
ஆடியே மகிழ்ந்திருப்பர்.
அலைபாயும் நினைவுகள்
நேரங்கள் விரைவாக நகரும்
மணியோசை நடுவே பாடப் பிரவேசம் நிகழும் வகுப்பில்
கற்றலுடன் கனநேரம் அறிவுரை காது கொடுத்து கேட்போம் - பின்
செவிடன் காது சங்காகி கற்றலை விட்டு கண்டதையும் கதைத்திடுவோம்
கருமமே கொள்ளாமல்

சின்னதான சேட்டைகள் சிலநேரம் சண்டைகள்
அதிபர் காது எட்டியதும் எட்டிப் பாய்ச்சல் எடுத்தோடுவோம்
எதற்கும் சளைக்காத நன் மாணாக்கர் என்றே - தினமும்
தம்மை புகழ்ந்திடுவர்.
பல நாட்கள் பயின்றதை கருமமுடன் கற்றிருந்தோம்
வந்ததுவே பரீட்சையதனால் வல்லவராயக் காட்டிடவே
நித்தம் முயன்று - நீ
முன்னேறுவாய் பாரினிலே
முற்றாய் உயர்ச்சிக்கே
முழுவதுமாய் அர்ப்பணிப்போம்.




**சு. விதுர்ஷனா**
13 Arts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிப் பருவம்

**பள்ளி பருவமது**
**இனிதான காலமது**

பள்ளிக் கூட முதல் நாளில்
தேம்பி அழுது நின்றேன்
அதைக் கண்டு என் ஆசிரியர்
அன்பாக என்னை அழைத்து
முத்தங்கள் பல தந்து
அன்பால் தேற்றி என்னை
பக்கத்தில் அமர வைத்தார்
மறப்பேனா இத்தனையும்



பள்ளிப் பருவமது
இனிதான காலமது

அதிகாலை நான் எழுந்து
பள்ளிக்கு ஆயத்தமாக
என் பெற்றோர் கூடயிந்து
ஒத்தாசை பல புரிந்து - நான்
பள்ளிக்குப் போக வழிமேல் விழிவைத்து
எப்போது நீ வருவாய்
என்று நினைக்கையில்
பள்ளிவிட்டு வந்து நிற்பேன்

பள்ளிப் பருவமது
இனிதான காலமது

வண்ணமான கலர் தந்து
வண்ணமாக தீட்டச் சொன்ன
வெள்ளைப் பேப்பரில் பல கீறல்
வண்ணத்தால கீறி வைப்பேன்
அதைக் கண்டு என் ரீச்சர்
நீ வரைந்த சித்திரம் தான்
அழகென்று தொங்க விட
பூரிப்பால் திகைத்து நின்றேன்



பள்ளிப் பருவமது
இனிதான காலமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப்பான கதை சொல்லி
இனிமையாக பாடிக்காட்டி
இனிமையாக நானும் பாட
பள்ளிப் பருவம் தானே
எனக்கு கைகொடுத்தது
ஆசான் அறிவுரையால்
பல திறனும் நான் பெற்று
போட்டியில் முதலிடமாக நிற்கின்றேன்

பள்ளிப் பருவமது
இனிதான காலமது

சகபாடி எல்லோரும்
வகுப்பறை கூட்டிலே
ஒன்றாய் இருந்தாலும்
சிறு சண்டை பிடிச்சிட்டு
மறு கணம் மறந்திடுவோம்
ஒன்றாக சேர்ந்து நிற்போம்
பிரிவு என்று ஒன்று வந்தால்
பாடசாலை லீவு தானே

பள்ளிப் பருவமது
இனிதான காலமது

குறும்புகள் செய்திட்டு
மௌனமாக இருந்திருப்போம்
அது கண்ட எங்கள் ஆசான்'
பிரம்போடு வந்து அதட்டி
மௌனமாகச் சென்றிடுவார்
மனதிற்குள் மகிழ்ந்திடுவோம்
இருந்தாலும் பயமொன்று
எங்களுக்குள் இருந்திடுமே.

பள்ளிப் பருவமது
இனிதான காலமது

பள்ளிப் பருவத்தில்
எதைதான் செய்தாலும்
அத்தனையும் மறந்திடுமா?
சிட்டுக்குருவிகளாய்
சிறகடித்துப் பறந்தோம்
கொரோனா காலத்திலே
துடிதுடித்துப் போனோமே
இப்போது கூடி விட்டோம்
பள்ளிக் கூடத்திலே.

பள்ளிப் பருவமது
இனிதான காலமது

-நன்றி-

**Logithan Pirathiksha**
2021, Batch.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாக் கல்வி

கடல் கடந்தும்
காடு வனம் கடந்தும்
தேடிச் சேர்க்கும்
கரை காண முடியாத செல்வம்
மேன்மையாய் வாழவும்
மேலோர் மதிக்கவும்
ஏற்றம் தரும் கல்வி
ஒழுக்கமும் அன்பும்
ஒற்றுமையும் பணிவும்
நன் கல்வியால் மேலோங்கும்
வெள்ளத்தில் மூழ்காது
தீயினால் வேகாது
கள்வர்கள் களவாடி
கவர முடியாது
தேன் தமிழின் தீஞ் சுவையும்
தெவிட்டாத பைந்தமிழும்
பசிதீர்க்கும் என்பது போல்
அழியாத கல்வியினை
ஆர்வத்துடன் கற்றிட்டால்
அசைக்க முடியாதெம்மை.



**சு. விதுர்ஷனா**
13 Arts


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் விழுப்பம் தரும்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான்"

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனது வாழ்வின் உயர்வை, அவனது வாழ்வின் வெற்றி. தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கின்றது. சீரிய வாழ்வுக்கு சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமே ஆகும் என்றால் மிகையல்ல. இதனாலேயே எல்லாப்புகழ் மிக்க தொல்காப்பியரும் "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்றார்.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லை என்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போகிறது. மனிதன் மனிதனாக வாழ்வதே தலை சிறந்த ஒழுக்கம். இதனை நாம் உள்ளத்தில் நன்கு பதித்துக்கொள்ள வேண்டும். பல்வேறு திறமைகளைக் காட்டிலும் பல்வேறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்ததாக வேண்டப்படுகின்றது.

உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம் வாழவேண்டும் மற்றவர்கள் பார்த்து பழிக்கும் வகையில் நம் வாழ்வு அமையக்கூடாது. இறந்தும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சியமாக அமைய வேண்டும். இறந்தும் நாம் வாழ வேண்டுமாயின் இருக்கும் போதே மேன்மையான வாழ்வை வாழ வேண்டும். அந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாகவே வரும். இதனையே வள்ளுவரும் ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை. எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளீட்டுவது வாழ்வின் நோக்கமாயினும் அதன் மூலம் புகழ் ஈட்டுவதே நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும். பொருள் வழியே புகழ் வரவேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக நாம் மதித்து பேண வேண்டும். ஒழுக்கத்தை உயிர்போல் கருதி காப்பாற்ற முனைய வேண்டும். இத்தகையோரையே வள்ளுவர் "ஒழுக்கத்தின் ஒல்கா உரவோர்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கமுடையோர் நிச்சயமாக உயர்வடைவார். நீ எதை மதிக்கிறாயோ அது உன்னை மதிக்கும். என்பது முதுமொழி. உலகத்தை உயிராக, உயர்வாக மதிப்போருக்கு ஒழுக்கம் உயர்வு தரும் என்பது திண்ணம். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்! என்பது வள்ளுவர் வாக்கு." தீயொழுக்கம் என்றும் துன்பத்தையே தரும் என்பதை நாம் என்றும் மறந்துவிடக் கூடாது. ஒழுக்கம் இல்லாதோர் தலையின் இழிந்த மயிரினைப் போன்று ஆகிவிடுவர். எனவே சமூக அந்தஸ்த்தைப் பெற ஒழுக்கம் உயிர் போன்றது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

ஒழுக்கத்தில் உயர்ந்தோர் பலர். புத்தர், இயேசு, காந்தி போன்றவருடைய வரலாற்றை புரட்டிப் பார்போமானால் அவர்கள் ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்பதை காணலாம்.

நீங்கள் கீதைச் சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் நான் மகிழ்ந்து விட மாட்டேன். வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் போன்றவற்றை பயின்றாலும் எனக்கு கவலையில்லை. ஆனால் முக்கியமாக ஒழுக்கம்பயில வேண்டும். என மாணவர்களுக்கு உபதேசித்தார் காந்தியடிகள். அவர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்துப்பேணி காப்பாற்றியதன் மூலமே உலகத்தோரால் உயர்வான இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

சுருங்கக் கூறின் ஒழுக்கத்தைப் பேணுவோர் உயர்வடைவர். அல்லாதோர் பழியெய்தி வாழ்வில் பாழ்பட்டழிவர். இந்த உண்மையை எந்நாளும் நினைவிற்கொண்டு வாழ்வோமாயின் நமது வாழ்வு வளம் பெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்.

Discipline is the bridge
Between goals and
accomplishment.

**சு. விதுர்ஷனா**
13 Arts


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையெழுத்தை வைத்து ஒருவரின் குணாதிசயங்களை சொல்லலாமா?

பெருமளவு உண்மைதான் கையெழுத்தை வைத்து ஒருவரது குணாதிசயத்தை அறியும் கலைக்கு Graaphology என்று பெயர். மூளை மற்றும் நரம்பியல் தொடர்பான நோய்க் குறிகளை கணிப்பதற்கும் மருத்துவர்கள் நோயாளியை எழுதச் சொல்லி ஆய்வு செய்வதுண்டு.

வலப்பக்கம் சாய்வான கையெழுத்து உடையவர்கள் அதிகமாக உணர்ச்சிகளை வெளிக்காட்டுபவர் சற்றும் உணர்ச்சிவசப்படாதவர்கள். செங்குத்தாக எழுதுபவர் என்றால் உணர்ச்சிகளை அளவோடு சரியான முறையில் வெளிப்படுத்துபவர்.

எழுத்துக்களின் தலைப்பகுதியில் வைக்கப்படவேண்டிய புள்ளி தள்ளித்தள்ளி வைக்கப்பட்டால் கவனக்குறைவான மனிதர். குறுக்கி குறுக்கி எழுதினால் சிக்கனக்காரர். சிலரது கையெழுத்தை பார்த்தால் சிறகடித்துப்பறப்பது போலிருக்கும். . . Artistic Attitude எனப்படும் கற்பனை வளத்தின் அறிகுறி அது.

வார்த்தைகளின் இடையிலும் வரிகளின் இடையிலும் அதிகமாக இடைவெளி விட்டிருந்தால் செலவாளி என்று பொருள். எழுதுகிற தாளில் பேனாவின் அழுத்தம் அதிகம் இருந்தால் மிகவும் உணர்ச்சிகரமான மனிதர்!

ஒருவரது ஆளுமையைக் கட்டுப்படுத்தும்மூளைதான் அவரது கையெழுத்துக்கும் காரணமாகிறது. எனவே கையெழுத்தைக் கொண்டு ஆளுமையைக் கணிக்கலாம் என்றும் சொல்கிறார்கள்.

**சு. தர்ஷிகா**
13 A/L
விஞ்ஞான பிரிவு
2020 A/L Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வருடங்களாக பிரிக்கப்படாத கடிதம்

பூமியைப் பற்றி ஆய்வு நடத்தி சாதனை படைத்தவர் விஞ்ஞானி மேக்மில்லன். ஒரு முறை ஆய்வுக்காக வடதுருவம் புறப்படுவதாக அறிவித்தார். அப்போது அவர் பெயரில் கடிதம் ஒன்று வந்தது. பிரித்துப் பார்த்தார். அதுனுள் மூடப்பட்டநிலையில் இன்னொரு உறையும் ஒரு துண்டுச் சீட்டும் இருந்தது. அதில் "உங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாத சிரமமான நிலை ஏற்பட்டால் இந்த உறையை திறந்து பார்க்கவும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

50 ஆண்டுகள் கழிந்தன உறை திறக்கப்படாமலே இருந்தது வெகு நாட்களாக திறக்கப்படாமல் இருக்கும் கடிதத்தை கவனித்த மேக்மில்லனின் நண்பர் ஒருவர் இதுபற்றி அவரிடம் கேட்டார். அதற்கு யாரோ ஒரு நண்பர் எனக்கு பிரச்சினை வந்தால் உதவுவதற்காக இதனை எழுதியுள்ளார். அதை மதித்து இந்தக் கடிதத்தை என்னோடு வைத்துள்ளேன். ஆனால் என்ன பிரச்சினை வந்தாலும் என்னால் சமாளிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை என்னோடு இருப்பதால்அதை திறந்து பார்க்கஅவசியம் ஏற்படவில்லை என்று நடந்தவைகளை விளக்கினார்.

**S. Darshika**
13 A/L Maths
2020 Batch


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார்தான் தோற்கவில்லை

# முயற்சி செய் . . .



தன் ஆசைகளையும் இலட்சியங்களையும்
தேடித்தேடி அலுத்துப்போன - பலருக்கு
பெரும் ஆறுதலையும் சிறு மாறுதலையும்
கட்டாயம் வழங்கும்.

வாருங்கள்
யார்தான் தோற்கவில்லை என்பதை
இதயத்தில் எழுதி
எரிமலையாய் மீண்டுஎழ . . .

யார்தான் தோற்கவில்லை
யார்தான் தோற்கவில்லை

எந்தக்கல்லை வணங்கினாலும்
ஈடேற முடியாது
வைரக்கல்லாய் உன்னை மாற்ற
வைராக்கியம் போலேது . . .

தயக்கத்தைவிட மிகப்பெரிய தடையேதும்
கிடையாது
அதை நீ தாண்டாமல் எதையும்
அடைய முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது கிரகங்களும்
உனக்காய் மட்டுமே உலவாது
ஆருடத்தையே நம்பி இருந்தால்
அப்பிய பீடை அகலாது

அனுபவம் தான் ஆண்டவன்
அதை நீ தேடிப்போ
கோயில் கோயிலாய்ப் போவதைவிட
தோல்விகளை நாடிப்போ

யார்தான் தோற்கவில்லை
எதற்கு நீ வெட்க வேண்டும்
எம் முயற்சியும் செய்யாமல்
ஏளனிப்போர்தான் வெட்கவேண்டும்

ஐம்புலத்தின் காதைமட்டும் அவ்வப்போது
ஊமையாக்கு
ஆசைகளை ஓடவிட்டு
அதையே உன்பாதையாக்கு

பிறப்பு ஓர் பந்தையம்
இறப்பின் பின்னே முடிவு தெரியும்
இடையில் தெரியும் முடிவுவெல்லாம்
எக்கணமும் மாற்றம் புரியும்

மரணத்தைவிட எதுவுமே
நிரந்தரமில்லை புரிந்துகொள்
எந்நொடியும் இறப்பு வரலாம்
எண்ணியதையடைய விரைந்துசெல்

**தில்ஷா ரவிச்சந்திரன்**
13 A/L Maths
2020 Batch


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உந்துதல் மேற்கோள்கள்



01. தூக்கத்தில் இருந்து எழுந்து
கொள்ள அலாரம் வைக்காதே!
உன் படுக்கைக்கு தீ வை!

02. நீ ஏதும் செய்யாமல் ஏதாவது நடக்கும்.
என எண்ணுவது முட்டாள் தனம்!
நினை, நினைத்தால் "தானே" நடக்கும்
இங்கே நினைப்பது என்பது
ஒருவித செயற் திறனே!

03. தெளிவும் துணிவும் உன்னோடு
இருந்தால் இந்த உலகம்
உன்காலடி மண்ணோடு இருக்கும்
உன், ஒவ்வொரு எண்ணங்களும்
பிரபஞ்சத்தினால் எண்ணப்படுகிறது.

04. கடுமையாக தவம் செய்தால்
நீச்சல் அடிக்க முடியாது
தண்ணீரில் சில காலம் தத்தளித்தாலே
அது சாத்தியம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. உன் இலட்சியப் பாதையில்
கொஞ்சம் சுயநலத்தோடு இரு
அதுவே பொது நலத்தின் அடிப்படை
இங்கே நான் குறிப்பிடும் சுயநலமே
பொது நலம் தான்.

06. நிகழ் காலத்தை விட உன்னதமானது
நினைப்பதை நிகழ்த்தும் காலம்!

07. காலம் எனும் சிற்பி, உன்னை
செதுக்கிக் கொண்டிருக்கின்றது
அதில் நீ சிற்பமா?
இல்லை சிதறி விழும் கற்களா?
என்பதை நீ தான் முடிவு செய்ய வேண்டும்.

08. தளராத தன்னம்பிக்கை உனக்குள்
இருந்தால், உன் இலக்கை
அடைவதற்கான வல்லமைகள்
உன் முயற்சியில் இருக்கும்!

09. உலகை சொந்தமாக்க
உன் திறமையையும் தகுதியையும்
வெளிக்காட்டு.

10. செல்லும் பாதையில்
எல்லாம் யதார்த்த நிகழ்வுகள் அல்ல
வரிகளின் கோர்வையே வாக்கியம்
வலிகளின் கோர்வையே வரலாறு.

**V.T. Roshani**
2020 Bio Technology


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லி நினைவலைகள்

அழுது, புரண்டு, கத்தி, கூத்தாடி, பாடசாலைக்கு செல்ல முடியாது என்று அடம்பிடிப்போம். ஆனால், நாம் என்ன தான் அடம்பிடித்தாலும் அழுகையோடு பாடசாலை சென்ற முதல் நாள் யாருடைய வாழ்க்கையிலும் மறக்க முடியாது. குட்டிக் குட்டிச் சப்பாத்து இடுப்பு வரைக்கும் புத்தக மூட்டை, சாப்பாட்டுப் பெட்டி, கலர் கலராய் தண்ணீர் போத்தல் எல்லாமே மீண்டும் கிடைக்காத பொற்காலங்கள்.

சாதி இல்லை, மதம் இல்லை, பால் வேறுபாடு இல்லை, இனவாதம் இல்லை என்று புரியவைத்தது நம் பாடசாலை வாழ்க்கை. அடுத்தவருடைய உணவை திருட்டுத் தனமாக எடுத்து சாப்பிடுதல், இரகசிய திட்டங்களை தீட்டி சக மாணவர்களின் தண்ணீர்ப் போத்தல்களை எடுத்து தண்ணீரை எல்லாம் குடித்து விட்டு வெற்றுப் போத்தல்களை அதே இடத்தில் வைத்தல், குட்டி குட்டிச் சண்டைகள், குட்டிக் குட்டி திருட்டு, அகப்படுகையில் வலிக்க வலிக்க அடி, உருண்டு புரண்டு பல காயங்கள் இதெல்லாம் ஒவ்வொருவரும் அவர் அவர் பாடசாலை வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வுகள்.

கரும்பலகைகளோடு மாணவர்களை ஈர்க்கும் ஆசிரியர்கள் ஒரு பக்கம், கவனமாக ஒழுக்கத்தை போதிக்கும் ஆசிரியர்கள் இன்னொரு பக்கம் இருக்க நீங்கள் என்ன சொன்னாலும் நாங்கள் எழுதுவோம் என்று எழுதும் பென்களின் திறமையை சொல்ல வார்த்தையே இல்லை.

என்னதான் வீட்டில் சென்று மின் விசிறியின் கீழ் உறங்கினாலும், நமது பாடசாலை ஆலமரத்தின் கீழ் காற்று வாங்கும் போது வரும் உற்சாகம் தனி சுகம் தான்.

சண்டைகள் பல இட்டாலும் பாடசாலை சுற்றுலா என்றாலே இணையும் எங்கள் நட்பின் ஒற்றுமையை சொல்ல வார்த்தைகள் கிடையாது.

காலங்கள் ஓடினாலும் காலமோடு நாம் ஓடினாலும் நாம் கற்ற பாடசாலை நினைவுகள் என்றுமே அழியாது.

**T. Shahan**
T20E-Tec Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்வி பற்றிய தகவல்

01. இலவசக் கல்வியின் தந்தை - C.W.W. கன்னங்கரா.

02. இலவச பாடநூல் விநியோகம் - 1989 முதல் வழங்கப்பட்டு வருகிறது

03. இலவச மதிய உணவு அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு- 1989 முதல்

04. இலவசப்பாடசாலை சீருடை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு - 1993

05. பாடசாலை சாரணர் இயக்கம் நிறுவப்பட்ட ஆண்டு - 1971இல்

06. தேசிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1987

07. இலங்கை பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு - 1942

08. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறுவப்பட்ட ஆண்டு - 1978

09. மஹாபொல அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு - 1981

10. தேசிய கல்வி ஆணைக்குழு நிறுவப்பட்ட ஆண்டு - 1990

11. தேசிய கல்வி நிறுவகம் நிறுவப்பட்ட ஆண்டு - 1985

12. இலங்கையின் திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு - 1980

13. இலங்கையின் தொழிநுட்பக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு - 1993

14. இலங்கையின் ஆசிரியச் சேவை - 06-10-1994

15. இலங்கையின் நிர்வாக சேவை SLAS - 1963

16. இலங்கையின் கல்வி வலயங்களின் எண்ணிக்கை - 97

17. இலங்கையின் கல்வி கோட்டங்களின் எண்ணிக்கை - 302

18. பாடசாலைகளின் எண்ணிக்கை - 10650

19. இலங்கையின் நூலகங்களின் எண்ணிக்கை - 6698

20. இலங்கையின் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை - 15

**அ. ஹேனுஜா**

13A - Arts


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகளை தழுவிய புதுமொழிகள்

01. சோதனை எனும் கடலுடன் மோதினால் தான் சாதனை எனும் கரையை அடையலாம்.

02. முடியாது என்று முடங்குவதை விட முடியுமென முயன்று தோற்பது கௌரவம்.

03. வெற்றி உனக்கு சந்தோசத்தைத் தரும். ஆனால், தோல்வி நல்ல அனுபவத்தைத் தரும்.

04. கல்வி இல்லாத ஆன்மா பணிசெய்யாத சலவைக்கல்.

05. பயத்தை வெல்லாதவன் வாழ்வின் முதல் பாடத்தை கல்லாதவன்.

06. வெற்றி வந்தால் நம்பிக்கை வரும். ஆனால் நம்பிக்கை இருந்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும்.அதனால் நம்பிக்கையை வளர்த்துக்கொள்.

07. முயற்சி செய் தயங்காதே! முயலும் போது உன்னை முட்களும் முத்தமிடும்.

08. விழாமலே வாழ்ந்தோம் என்பதல்ல. விழுந்தும் ஒவ்வொரு முறையும் எழுந்தோம் என்பதே வாழ்வின் பெருமை

09. முந்திக் கொண்டே முதல் செங்கல் கோயிலின் அடித்தளத்தில் நின்று விடும்! காத்திருந்த கடைசி செங்கல் தான் கலசம் தொடும்! சாதிக்க மிக மிக அவசியம் பொறுமை!

10. முடியாது என எதையும் விட்டு விடாதே! முயன்று பார் நிச்சயம் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சாதாரண மனிதன் விழித்திருக்கும் போது தூங்குகிறான். சாதிக்கப் பிறந்தவன் தூங்கும் போது விழித்திருக்கிறான்.

12. எந்த விஷயம் நீ செய்தாலும் என்றுமே நம்பிக்கையோடு கடைபிடிக்க வேண்டிய தாரக மந்திரம் "என்னால் முடியும்"

13. ஜெயித்துக் கொண்டே இரு . . . நீ வளரும் வரை அல்ல . . . உன்னை வெறுத்தவர்கள் உன்னைப் பார்த்து வியந்து வாழ்த்தும் வரை..!

14. கடந்த காலத்தை பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள்!! அது கடுகளவும் கை கொடுப்பதில்லை.

15. தோல்வி இதயத்துக்கு போகக்கூடாது. வெற்றி தலைக்கு போகக்கூடாது.

16. அவமானம், தோல்வி, சோதனை ,தனிமை எல்லாம் கேட்பது உன் கண்ணீரையும் வலியையும் அல்ல. . . அது கேட்பது உன் நம்பிக்கையையும் உன் வெற்றியையும் தான்.

17. தனித்து நின்றாலும் துணிந்து நில். பலருக்கு தாழ்ந்து போகும் போதுதான் இந்த உலகம் காலில் போட்டு மிதிக்கத் துவங்கி விடுகிறது.

18. எழுந்து நடந்தால் இமயமலையும் நமக்கு வழி கொடுக்கும்!! உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் நம்மை சிறை பிடிக்கும் . .!

19. குறை சொல்பவர்களுக்கு நன்றி சொல்லுங்கள். ஏனென்றால் உங்களை நீங்களே செதுக்கி கொள்வதற்கு அவர்கள் தான் உளி கொடுக்கின்றனர்.

20. ஓடும் நீரோடை போல் ஓடிக் கொண்டே இரு. உனக்கான பாதை உருவாகும். ஆனால் நீரைப்போல் தெளிவாய் ஓடு.

**மு. ஷனுஜா**
2020 Batch Bio System Technology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் மகத்துவம்

கல்வி என்பது தனி மனிதனின் வளர்ச்சி ஆகும். இது அவனது வளர்ச்சியை அளவிட உகந்த கருவி என்றும் கூறலாம். மானிடத்தை நெறிப்படுத்தி மனித வாழ்வை வலுவுடையதாக மாற்றுவது கல்வி ஆகும். கல்வியின் அடித்தளமாக விளங்குவது எண்ணும் எழுத்துமாகும். இவ் எண்ணையும் எழுத்தையும் உன்னதமாக்குவது வாசிப்பு ஆகும். இந்தச்செயல் ஆரம்பக் கல்வியில் ஊற்றெடுத்து மனித வாழ்வின் இறுதிவரை நிலைத்து நிற்கின்றது வாசிக்கத் தெரிந்தவனே மனித வாழ்வை சுவாசிக்கத் தெரிவன் ஆவான்.

மனிதர்களின் இயற்கை அறிவையும் நுண்ணறிவையும் வெளிக் கொண்டு வருவது கல்வியாகும். மனிதன் தன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். "கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகிறான் " என்பது தத்துவ ஞானிகளின் கோட்பாடாகும். மனிதனின் அனைத்து விதமான வளர்ச்சிக்கும் அவனது அறிவு வளர்ச்சியே அடிப்படையாக திகழ்கின்றது.

கல்வியானது ஒவ்வொரு மனிதர்களிடமும் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும். அறிவுப்பசிக்கு சிறந்த விருந்தளிப்பது கல்வியே ஆகும். நாம் இளமையில் கல்வி கற்பது சிறந்ததாகும்.இதனையே
"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பர். அனைவரும் கல்வியை முழுமுச்சாய் கற்க வேண்டும்.

**மு. ஷனுஜா**
2020 Batch
Bio System Technology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும் குணம் நேர்மறைச் சிந்தனை எனப்படும். உயர்தரப்பரீட்சை எழுதப் போகும் பெரும்பாலான மாணவர்களுக்கு பின்வரும் விடயங்களில் பல உணர்வுகள் தோன்றலாம்.

1.தவணைப்புள்ளிகளில் குறைவான புள்ளி பெற்ற பாடங்களில் இறுதிப்பரீட்சையிலும் குறைவான புள்ளி வந்துவிடுமோ!

2. நாங்கள் எவ்வளவு தான் படித்தாலும் அதிகளவு புள்ளிகளை பெற முடியாதுள்ளதே!

3.பரீட்சை நெருங்குகின்றது பாடத்தில் அதிகளவு புள்ளிகள் பெறாவிட்டால் நான் என்ன செய்வேன்? என் இலட்சியத்தை அடையமுடியாதே என்றெல்லாம் தோன்றும்.

இவ்வாறான நிலைமைகளில் மாணவர்களாகிய நீங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும், உங்களுடைய எதிர்கால குறிக்கோளை எவ்வாறு நகர்தல் வேண்டும் என்பதனை சில விடயங்கள் மூலம் விளக்கலாம் என நினைக்கின்றேன்.

ஒரு தன்னம்பிக்கை பயிற்சியாளர் மாணவர்களுக்கு பயிற்சியளித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு நாள் அங்கிருந்த வெள்ளைப் பலகையில் மாக்கர் பேனாவால் தெளிவாகத் தெரியும் படியான ஒரு கரும்புள்ளியை வைத்தார். தனது மாணவர்களிடம் நீங்கள் பார்ப்பது என்ன? என்று கேட்டார்.

“சின்னதாய் ஒரு கரும்புள்ளி” எல்லோரும் சொன்னார்கள்.
பயிற்சியாளர் உரக்கச் சிரித்தார் “உங்களில் யாருமே வெள்ளைப் பலகையை பார்க்கவில்லையா? அந்தக் கரும் புள்ளி மட்டும் தான் கண்ணில் தெரிகின்றதா”? என்று கேட்டார். கரும் புள்ளியைப் போன்று வெள்ளைப் பலகையும் அங்கே இருக்கத்தான் செய்தது. ஆனால் எல்லோரும் கரும் புள்ளியை பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

இது போல் மற்றுறொருவகுப்பில் ஓர் ஆசிரியர் ஒரு கண்ணாடி குவளையில் பாதி நீர் நிரப்பி எடுத்து வைத்தார். பிறகு மாணவர்களிடம் “இங்கு என்ன இருக்கிறது?” என்று கேட்டார். ஒரு மாணவர் எழுந்து “இந்தக் குவளையில் பாதி தண்ணீரால் நிரப்பப் பட்டிருக்கிறது” என்று கூறினான்.

மற்றுமொரு மாணவன் எழுந்து “இந்தக் குவளையில் பாதி நீர் நிரப்பப் படாது இருக்கின்றது” என்ற கூறினான். மேற்கூறிய இரண்டு மாணவர்களில் யார் தன்னம்பிக்கை மிகுந்தவர்கள் என்பது உங்களுக்கே புரிந்திருக்கும். எது இல்லை என்று சிந்திப்பதை விட்டுவிட்டு எது இருக்கின்றதுஎன்பதை நினைப்பதுதான் ஒருவரது தன்னம்பிக்கையை அடைய அடையாளம் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக மனித மனம் நல்ல விடயங்களைக் கவனிப்பதை விட, தீய விடயங்களைக் கவனிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகிறது. இந்த தீய விஷயங்களின் மீதான கவனம் ஆனது கவனிப்பவரது தன்னம்பிக்கையைச் சிதைத்து விடுவதை யாரும் புரிந்து கொள்வதேயில்லை.

நம் நாட்டு பழமொழி ஒன்று உண்டு. “அது பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்” என்ற பழமொழி. இந்தப் பழமொழி ஒருவனுக்கு துன்பம் வந்தால் அடுக்கடுக்காய் துன்பம் வரும் என்று சொல்கின்றது. ஒருவனுக்கு துன்பம் வரும் போது, அவன் தனது துன்பத்தைப் பற்றியே அதிகம் சிந்தித்துக் கொண்டிருக்கிறான். கூடவே அப்போதைய துன்பத்தை விட பெரிய துன்பம் வந்தவிடுமோ என்று எண்ணுகிறான். அவனது எண்ணத்தைப் போலவே பெரிய துன்பமும் வந்து சேர்ந்து விடுகின்றது.

பல மேலை நாட்டு மனோவியலாளர்கள் ஆராய்ச்சி செய்து சமீப காலத்தில் கண்டு பிடித்த இந்த உண்மை இந்து மத புராணங்களில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. “நீ எதை எண்ணுகிறாயோ, அதுவே நிகழ்கிறது” என்கின்றது பகவத்கீதை. நீங்கள் ஒரு விடயம் குறித்து நல்லதாய் நினைக்கும் போது உங்கள் எண்ணங்கள் பிரபஞ்சத்திலுள்ள பேராற்றலை இழுத்து நல்லதையேநடத்தித் தருகிறது. அதுபோல நீங்கள் கெடுதல் நினைத்தால் கெட்டதையே நடத்தி விடுகிறது. உன்னால் முடியும் என நீ நினைத்தால் அது நிட்சயம் நடக்கும். உங்கள் திறமையை எதிர்காலத்தில், வளமான வாழ்வை, உங்கள் வெற்றியை, உங்கள் தன்னம்பிக்கையை உங்கள் எண்ணத்தின் மூலமாக நீங்களே உருவாக்கிக் கொள்கின்றீர்கள். எனவே உங்கள் எண்ணத்தின் படியே தன்னம்பிக்கையைப் பெற்றவர்களாக மாறுவீர்கள்.

இதுவரை உங்களைப் பற்றி யார் என்ன வேண்டுமானாலும் சொல்லியிருக்கலாம், இனியும் கூடச் சொல்லலாம், அது பற்றியெல்லாம் கவலைப் படாதீர்கள் உங்களைப் பற்றி எப்போதும் நேர்மையாகச் சிந்தியுங்கள். தன்னம்பிக்கை தானாக உருவாகும். எந்த நிலையிலும் எந்தச் சூழலிலும் உங்களைப் பற்றி ஒரு எதிர்மறையான எண்ணம் வந்துவிடாமல் கவனமாக இருங்கள்.

நான் திறமையானவன், நான் எல்லாப் பாடங்களிலும் உயர்வான புள்ளிகளைப் பெறுவேன், என்னுடைய எதிர்கால உயர்கல்விக் குறிக்கோளை அடைந்தே தீருவேன் எனக்கு நம்பிக்கை உண்டு, தைரியம் உண்டு, நான் சுறுசுறுப்பானவன், போன்ற நேர்மறையான எண்ணங்களை கூறும் போது இவ்வெண்ணங்கள் பிரபஞ்சத்திலுள்ள பேராற்றலை இழுத்து மாணவர்களாகிய உங்களுக்கு நல்லதையே நடத்தித் தரும். எனவே பரீட்சையைப் பற்றி தன்னம்பிக்கை கொள்ளுங்கள். உங்களால் சாதிக்க முடியும் என்ற எண்ணங்களுடன் உங்களை நகர்த்திக் கொள்ளுங்கள். பரீட்சையில் நல்ல பேறு கிடைக்கும். வெற்றி நிச்சயம். மேலும் உங்கள் கல்வி இலக்கினை நோக்கிப் புறப்படுங்கள்.எனது மனமார்ந்த வாழ்த்தக்கள்.

நன்றி

**திருமதி. சு. விஸ்வநாதன்**
B.B.A (D, ED)
ஆசிரியை, உவெஸ்லி உயர்தர பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருண்டைப் புழுவும் நோபல் பரிசும்

உருண்டைப் புழு (Rownd Worm) ஒட்டுண்ணிகளின் தாக்குதலால் உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பேர் பாதிக்கப்பட்டனர். இதனால் "கண் பார்வை இழத்தல், யானைக்கால் நோய்" ஆகியவை ஏற்பட்டன. வில்லியம் கேம்பேல் மற்றும் சதோஷி ஒமுரா ஆகியோர் உருண்டைப்புழு ஒட்டுண்ணிகளை அழிக்கும் "அவர்மெக்டின்" (Avermectin) என்ற மருந்தைக் கண்டு பிடித்தனர்.

Avermectin மருந்துக்கு 2015இல் மருத்துவ துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**T.Kishomi**
13Bio
2020 A/L Batch

---

## கல்வி

மண்கொண்ட மன்னவர் கூட தம்
மதிகெட்டு போனதற்கு நல் கல்வியற்ற
சான்றோனை தன்னகத்தே
கொண்டமையே என வரலாறு கூறும்




ஆனாலும் கல்வியென்ற ஆயுதமே
காலம் பல தாண்டி நிற்கும் என
அம் மன்னனின் சுவடுகள் சாடும்

சான்றுகள் பல கண்ட பின்னும்
கல்வியென்ற கலங்கரை விளக்காமே!
நம் காலத்தை நல்வழிப்படுத்தும்

காலங்கள் பல கடந்தாலும்
பருவங்கள் பல மாறினாலும்
ஆண்டுகள் பல ஓடினாலும்
அணையா தீபம் கல்வி ஒன்றே

**K. Vakshajah**
Arts -13B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியமான தகவல்கள்



1. அன்னாசிப் பழத்திற்கு விதைகள் இல்லை.
2. அத்தி, பலா மரங்கள் பூப்பதில்லை.
3. அரேபியாவில் ஆறுகள் இல்லை.
4. அந்தாட்டிக்காவில் மரங்கள் இல்லை.
5. இந்தியாவில் எரிமலைகள் இல்லை.
6. உத்திரப்பிரதேசத்தில் தென்னைமரங்கள் இல்லை.
7. யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை.
8. யோர்தான் நதியில் மீன்கள் இல்லை.
9. சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை.
10. ஹவாய் தீவில் பாம்புகள் இல்லை.
11. பூட்டானில் திரை அரங்குகள் இல்லை.
12. நேபாளத்தில் பகலில் மழை பெய்வதில்லை.
13. காந்தியடிகள் விமானத்தில் பயணம் செய்ததில்லை.
14. பறவைகளுக்கு வியர்வை சுரப்பி இல்லை.
15. மலைப்பாம்புகளுக்கு விஷம் இல்லை.
16. கிவி பறவைகளுக்கு இறக்கை இல்லை.
17. சிங்கமும்,புலியும் ஒரே காட்டில் வாழ்வதில்லை.
18. கடலில் முதலைகள் இருப்பதில்லை.
19. யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.
20. நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை.
21. நண்டுக்கு தலை இல்லை.
22. ஆமைக்கு பற்கள் இல்லை.
23. வண்ணத்துப்பூச்சிக்கு வாய் இல்லை.
24. மண்ணுளிப் பாம்பிற்கு கண் இல்லை.
25. அனைத்துப் பாம்புகளுக்கும் காதுகள் இல்லை.

**R.Kishomiya**
Engineering Technology
2020 A/L Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் அப்துல்கலாம் அவர்களின் சில பொன் மொழிகள்

1. உலகம் உன்னை அறிவதை விட உன்னை உலகிற்கு அறிமுகம் செய்து கொள்.

2. அதிகாலை நீ நினைத்த நேரத்தில் எழுந்து விட்டாலே தோல்விகள் உன்னைவிட்டு ஒதுங்கிக் கொள்ளும்.

3. வாய்ப்புக்காக காத்திருக்காதே உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.

4. கரைகளைக் கடக்கும் துணிவிருந்தால் தான் புதிய கடல்களை கண்டுபிடிக்க முடியும்.

5. வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒரு வழி, அடுத்தவர்களின் வெற்றியை உங்களுடைய வெற்றியைப் போல கொண்டாட கற்றுக்கொள்ளுங்கள்.

6. வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் ஒரு எதிரியாவது தேவை.

7. தவறான காரியங்களை ஒருபோதும் செய்யக்கூடாது. ஒரு இலக்கை நோக்கி செல்ல பல வழிகள் இருந்தாலும் நேர்மையான வழியே மிக சிறந்த வழி என்பதுடன் அது மட்டுமே வழியாக இருக்க வேண்டும்

8. வெல்வோம்,சாதிப்போம்,வேதனைகளை துடைத்தெறிவோம் எந்தை அருளால் எதுவும் வசமாகும்

9. கனவு என்பது தூக்கத்தில் காண்பதல்ல.உங்களை தூங்க விடாமல் செய்வது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவை இல்லை. துன்பங்களை சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.

11. உன் கைரேகையை பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே. ஏனென்றால் கையே இல்லாதவனுக்கு கூட எதிர்காலமுண்டு

12. ஒரு முறை வந்தால் அதுகனவு இரு முறை வந்தால் அது ஆசை.பல முறை வந்தால் அது இலட்சியம்

13. நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்.ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்

14. கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே. அது உன்னைக் கொன்று விடும். கண்ணைத் திறந்து பார் அதை நீ வென்று விடலாம்.

....வெற்றி உன்னிடம்....



**ர. டனிசா**
13 A/L விஞ்ஞான
பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் மிக முக்கியமான பெண்கள்

1) மேரி கியூரி 1867 - 1934

கதிரியக்க முறையில் கேன்சர் நோய்க்கான சிகிச்சை முறையைக் கண்டுபிடித்தவர்.

2) ரோசா பார்க்ஸ் 1913 - 2005

சமூக உரிமைப் போராளி. நிறவெறிக்கு எதிராக பேருந்தில் வெள்ளையருக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்து நிறவெறி மற்றும் தீண்டாமைக்கு எதிராக வாழ்நாள் முழுதும் போராடியவர்.

3) எமிலின் ஃபங்கர்ஸ்ஸ் 1858 - 1928

சமூக சீர்திருத்தவாதி. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வேண்டும் என்று போராடி பெற்றுத் தந்தவர்.

4) அடா லவ்லேஸ் 1825 - 1852

கணிதவியல் வல்லுனர். உலகின் முதல் கம்பியூட்டர் ப்ரொகிராமராகக் கருதப்படுபவர்.

5) ஏஞ்சலா பர்டெட் கௌட்ஸ் 1814 - 1906

கொடையாளர். வீடற்ற ஏழைகளுக்கு நிதி உதவி அளித்து குழும வீடுகளைக் கட்டித்தரும் முறையை முதன் முறையாக அறிமுகப்படுத்தியவர்.

6) மேரி உல் ஸ்டோன்கிராஃப்ட் 1759 - 1797

எழுத்தாளர், மற்றும் தத்துவஞானி பெண்கல்வி மற்றும் பெண் உரிமைப்போராட்டங்களை முன்னெடுத்து பெண்களின் சம உரிமைக்காக போராடியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) மேரி ஸ்டொப்ஸ் 1880 - 1958

பெர்த் கண்ட்ரோல் அட்வகேட். உலகம் முழுக்கப் பெண்களிடையே மகப்பேறு என்பது திட்டமிட்டு நிகழ்த்தப்பட வேண்டிய இன்றியமையாத விஷயம். அதை ஏனோதானோ வென்று போகிற போக்கில் நிகழ்த்தக் கூடாது எனும் சிந்தனையை வலுப்படுத்த போராடியவர்.

8) ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் 1820 - 1910

இராணுவத்தில் செவிலியாகப் பணிபுரிந்தவர். இராணுவ மருத்துவ சேவைகளில் புதுப்புது இன்றியமையாத மாற்றங்களை கொண்டு வந்தவர்.

9) மார்கரெட் தாட்சர் 1925 - 2013

பெண் அரசியல் தலைவர். பிரிட்டனின் முதல் பெண் பிரதமர்.

10) ரொஸலிண்ட் ஃப்ராங்க்ளின் 1920 - 1958

படிகவியலாளர். DNA இன் Double Helix அமைப்பைப் பற்றி கட்டுரைகளையும், கண்டு பிடிப்புக்களையும் முதன் முறையாக உலகின் முன் சமர்ப்பித்தவர்.


01


02


03


04


05


06


07


08


09


10

**ர. டனிசா**
13 A/L விஞ்ஞான பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டு பிடிப்புக்களும் அறிஞர்களும்

| | |
|---|---|
| 1. மின்காந்தக் கொள்கை | - மாக்ஸ் வெல் |
| 2. எலக்ட்ரான் | - J.J. தாம்சன் |
| 3. மின்வல்பு | - தாமஸ் அல்வா எடிசன் |
| 4. ஆக்சிஜன், நைட்ரஸ் ஆக்சைட்டு | - J.B. பிரிஸ்ட்லி |
| 5. ஈர்ப்ப விதி | - நியூட்டன் |
| 6. பெனிசிலின் | - சர் அலக்சாண்டர் பிளெமிங் |
| 7. கோள்களின் இயக்கவிதி | - கெப்ளர் |
| 8. தனிம வரிசை அட்டவணை | - மெண்டலீ.'.ப் |
| 9. சூரியக் குடும்பம் | - கோபர் நிகஸ் |
| 10. நீராவி என்ஜின் | - ஜேம்ஸ் வாட் |
| 11. புவி ஈர்ப்ப விசை | - சர் ஐசாக் நியூட்டன் |
| 12. சுருக்கெழுத்து | - சர் ஐசாக் நியூட்டன் |
| 13. கதிரியக்கம் | - ஹென்றி பெக்குரல் |
| 14. ரேடார் | - சர் நாபட் வாட்சன்வாட் |
| 15. செல | - ரொபட் ஹீக் |
| 16. தொலைபேசி | - கிரகம் பெல் |
| 17. மக்கள் தொகைக் கோட்பாடு | - மால்தாஸ் |
| 18. ஜெட் விமானம் | - ஃபிராங்க் விட்டில் |
| 19. குருடர்களுக்கான எழுத்து முறை | - லூயி பிளாய்லி |
| 20. தொலைக்காட்சி | - J.J. பெயர்டு |
| 21. அம்மை தடுப்பூசி | - எட்வர்டு ஜென்னர் |
| 22. போலியோ தடுப்பு மருந்து | - டாக்டர் ஜோன் சால்க் |
| 23. டைனமைட் | - ஆல்பர்ட் நோபல் |
| 24. இன்சுலின் | - பேண்டிங் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. இதயமாற்று அறுவை சிகிச்சை - டாக்டர் கிறிஸ்டியன் பெர்னாட் (இதய மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர் P.K. சென்)

26. இரத்த ஓட்டம் - வில்லியம் ஹார்லி

27. குளொரோ.்.பார்ம் - ஹாரிஸன் சிம்ப்ஸன்

28. விசர் நாய்க்கடி மருந்து - லூயி பாய்ஸ்டியர்

29. எலக்ட்ரோ கார்டியோகிராம் - எயின் தோவன்

30. பாக்டீறியா - லீவன் ஹூக்

31. குவாண்டம் கொள்கை - மாக்ஸ் பிளாங்

32. எக்ஸ்-ரே - ராண்டஜான்

33. புரோட்டான் - ருதர் போர்டு

34. நியூட்ரான் - ஜேம்ஸ் சட்விக்

35. தெர்மா மீட்டர் - ஃபாரன் ஹீட்

36. ரேடியோ - மார்க்கோணி

37. கார் - கார்ஸ் பென்ஸ்

38. குளிர்சாதனப்பெட்டி - ஜேம்ஸ் ஹாரிசன்

39. அணுகுண்டு - ஆட்டோஹான்

40. ரேடியம், ரேடியோ கதிர்வீச்சு - மேடம் மேரி கியூரி

41. ஹெலிகா.்.டர் - பிராக்கெட்

42. லாக்ரதம் - ஜோன் நேப்டியர்

**ர. டனிசா**
13 A/L விஞ்ஞான
பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCHOOL DAY




*Photos of Schoolday are tresures*
*Of a every Special kind*
*And every time we see them*
*They bring wonder full memories to mind*

*As the years are passing swiftly by*
*There are so many things to recall*
*Beginning with kindergarten*
*When you were very small*

*You are building a foundation*
*That you'll use your whole life long,*
*Enjoy these school days*
*with all your heart.*

*Too soon they will be gone.*

**R. Saraniya**
12A Art's
2021Batch


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை

பீனிக்ஸ் பறவை சூரியனை
காதலித்து . . .
அதனை அடைய வேண்டும் என்ற
எண்ணத்தில் சூரியனை நோக்கி பறந்தது . . .
சூரியனின் வெப்பத்தினால் கருகி சாம்பலானது.
மறுபடியும் உயிர்த்தெழுந்தது
சூரியனை நோக்கி பறக்க
ஆரம்பித்தது . . .
ஒவ்வொரு முறையும் சாம்பலாகியது.உயிர்த்தெழுந்து
பறந்து கொண்டே இருந்தது . . .
அதே போலத்தான் நாமும் . . .
ஒவ்வொரு முறையும்
வெற்றியினை நோக்கி ஓடுவோம் . . .
தோல்வி எம்மை சுட்டெரிக்கின்றது
என அஞ்சி ஓட்டத்தை நிறுத்த வேண்டாம் . . .
என்றேனும் ஒரு நாள் நிச்சயம்
வெற்றி பெறுவோம் . . .



**S. Kamshayini**
Grade-12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1. ஆணாகவும் பெண்ணாகவும் மாறும் உயிரினம் ஈரிதழ் ஈட்டு

2. கரப்பான் பூச்சி தலையில்லாமல் ஒன்பது நாள் வரை உயிர் வாழும். பசியால் மட்டுமே கடைசியில் உயிர் விடும்.

3. பூனையின் கண் பார்வை மனிதனை விட எட்டு மடங்கு கூர்மையானதாகும்.

4. முந்திரி உற்பத்தியில் இந்தியா முதல் இடம் வகிக்கிறது

5. மிகச்சிறிய இதயம் உள்ள விலங்கு சிங்கம்

6. எடிசன் அவர்கள் 1368 கண்டுபிடிப்புக்களை அறிமுகப்படுத்தியுள்ளார்

7. நீர்யானையின் தோலில் ஒருவித இளஞ்சிவப்பு நிறத்தாலான திரவம் சுரந்து கடுமையான வெப்பத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள, குளிர்ச்சியை கொடுக்கிறது.

08. ஒரு பென்சிலைக் கொண்டு சுமார் 50 கிலோ மீற்றர் நீளத்திற்கு கோடுகள் வரைய முடியும்.

09. பெருலா என்ற செடியில் இருந்து வெளிவரும் ஒரு திரவபொருள் தான் பெரும்காயம்.

10. கிளியும், முயலும் தலையைத் திருப்பாமலே தன் பின்னால் இருப்பதை கண்டு பிடித்து விடும்.

11. தாயின் கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு இதயம்.

12. பச்சோந்தியின் நாக்கு அதன் உடலைவிட இரண்டு மடங்கு நீளத்தைக் கொண்டிருக்கும்.

13. துவிச்சக்கரவண்டியைக் கண்டு பிடித்தவர் மார்க் மிலன் ஆவார்.

14. ஒரே சமயத்தில் 900 லீற்றர் தண்ணீர் குடிக்கும் உயிரினம் ஒட்டகம் ஆகும்.

15. ஒட்டகம் மட்டுமே தன் காதை நாக்கால் தொடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. உண்ணி எனப்படும் தேள் பூச்சி ஒருவருடம் வரையில் பனிகட்டியினுள் உயிருடன் இருந்து ஐஸ் கரைந்த பின் வெளிவரும் ஆற்றல் கொண்டது.

17. ஒன்றரை நிமிடம் மட்டுமே தூங்கும் விலங்கு நீர் நாயாகும்

18. 22 யானைகளின் எடையைக் கொண்டது ஒரு நீலத் திமிங்கிலம். இதன் இதயம் ஒரு சின்ன கார் அளவிற்கு இருக்கும்.

19. உலகில் மிக நீண்ட நாள் வாழும் விலங்கு முதலையாகும். இது சுமார் 300 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

20. தூங்காத உயிரினம் புழுக்கள் ஆகும்.

21. நாம் இறந்த பிறகும் நம் கண்கள் சுமார் 6 மணிநேரம் பார்க்கும் திறன் கொண்டிருக்கும்.

22. ஒரு நெருப்புக் கோழியின் முட்டை 22 கோழி முட்டைகளுக்குச் சமம்.

23. கறையான் ஒரு நாளைக்கு இடும் முட்டையின் எண்ணிக்கை முப்பதாயிரம் ஆகும்.

24. கிளாமினோமோடசு என்கின்ற ஒரு செல் தாவரம் நகர்ந்து போகும் ஆற்றல் உடையது.

25. சிகரட் நிறுவனத்தின் முதல் உரிமையாளர் மார்கப்பொலோ நுரையீரல் புற்றுநோய் தாக்கி இறந்து போனார்.

26. பூமியில் பிறந்த அனைவரும் 270 எலும்புகளுடன் பிறந்து 206 எலும்புகளுடன் இறக்கிறோம்.

27. சிப்பிக்குள் முத்து உருவாக சுமார் 15 ஆண்டுகள் ஆகும்.

28. ஸ்காலிப் என்ற கடல் சிப்பிக்கு 100 கண்கள் உள்ளன.

29. உலகில் மீன் இனம் தோன்றி சுமார் 50 கோடி ஆண்டுகள் ஆகின்றன.

30. நெருப்புக் கோழி தனது உணவை செரிக்க வைப்பதற்காக சிறு சிறு கற்களை விழுங்கும்.

K. **ஷனுஜா**
2020 Batch
Bio System Technology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் ஒரு பயணம்



என்னை கருவில் சுமந்த
என் சிகரமே
உன்னை என் மனதில் சுமக்கிறேன்
உயிர் உள்ளவரை
உணர்வுகள் எல்லாம் நீ தானே தாயே!

விண் தாண்டிட விரும்பினாயே என்னை
விண்ணாக உன்னை கண்டேன்
கடல் தாண்டி வந்த கற்பக நிலா - உன்னை
கண்ணிமை போல காப்பேன் தாயே!

உன்னை பிரிந்து புதுவுலகம் தேடி வந்தேன்
உயர்த்தும் பள்ளிக்கூடத்திற்கும்.
உன் அன்பான கண்டிப்பை தந்து என்னை அரவணைத்து.
பாரினில் உயர்த்திடும் பாடசாலை

பள்ளியில் கற்ற பணிவை
பாரினில் காட்டிடு
வெள்ளியில் பிரகாசமாய் விளங்கிடுவாய் தினம் தோறும்

இழக்கும் நேரத்தில் இதய துடிப்பு அதிகரித்தது.
பாடசாலை விட்டு செல்லும் காலம்.
கல்லூரி வாழ்க்கையில் கனா காணும் நேரங்கள்
கனவுகள் நினைவாகும் நேரம்
கருவில் சுமந்த தாயின் அன்பு ,மனதில் சுமந்த ஆசானின் அன்பு
கன்னங்கள் சிவக்கும், கனவின் சிறப்பு
இலட்சியம் நினைவாகும் நேரம்

**தியாகரன் ஹர்னி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில்
# தத்துவஞானிகளின் தத்துவங்கள்




01) சோக்ரடீஸ்

* எனக்கு எதுவும் தெரியாது என்பது எனக்கு தெரியும். ஏனெனில், நான் ஒரு அறிவாளி.

* உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை இருக்கும்

02) பிளேட்டோ

* உள்ளடக்கத்துடன் வாழ்வதே மிகப் பெரிய செல்வம். நல்லவர்களுக்குச் சட்டங்கள் தேவையில்லை. ஏனெனில், அவர்கள் பொறுப்புடன் வாழ்வார்கள். கெட்டவர்கள் தங்களுக்கே உரிய சட்டத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள்.

03) கார்ஸ்மாக்ஸ்

* மூலதனம் இறந்த தொழிலாளரைப் போன்றது அது உயிருள்ள தொழிலாளரின் உழைப்பை உறிஞ்சி வாழ்கிறது.

04) அடோல்.'.ப் ஹிட்லர்

* உன்னை இந்த உலகமே திரும்பிப்பார்க்க வேண்டும் என்றால் நீ யாரையும் திரும்பிபார்காதே.

05) டார்வின்

* மனிதன் ஒரு மணி நேரத்தை வீணாக்குகின்றான் என்றால் அவன் வாழ்க்கையின் மதிப்பை உணரவில்லை என்று அர்த்தம்.

06) ஆபிரகாம் லிங்கன்

* கண்ணெதிரே காணும் ஒவ்வொன்றையும் நம்புவது அபாயமானது. அதைக் காட்டிலும் ஒருவரையும் நம்பாதிருப்பது அபாயகரமாகும்.

07) ஓசோ


* குறிக்கோளை அடையும் முயற்சியில் தான் மகிமை இருக்கிறது அந்தக் குறிக்கோளை அடைவதில் இல்லை.

**M.Thusharika**
12B Arts 2021 batch.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்



கல்வி எனும் பெரும் கடலிலே
துடுப்பிலாப் படகாய் தத்தளிக்கையில்
துடுப்பெனக் கைதந்து உதவி
கரைசேர்ப்பது ஆசான்

கல்வியே வேப்பங்காய் போல
நாம் கற்கையில் அதை
தேன் போல அழகாய் ஊட்டி
அறிவு சுடரை ஏற்றுவது ஆசான்

வண்டுகள் போல ஊர்ந்து சேட்டை
பல செய்கையில் கோபம் கொள்ளாமல்
அன்பாய் அரவணைத்து திருத்தி
தட்டிக் கொடுப்பது ஆசான்.

**N. Thushani**
12B - Arts.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல் கலாமின் சிந்தனைத் துளிகள்

* வெற்றி பெற வேண்டும் என்ற பதற்றம்
இல்லாது இருப்பது தான்
வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி

* நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை
நீ எண்ணுவது விண் மீனாக இருந்தாலும்
உன் உழைப்பால் நீ எண்ணியது
உன்னை வந்து சேரும்.
நீ நீயாக இரு.

* அழகைப் பற்றிக் கனவு காணாதீர்கள்
அது உங்கள் கடமையை பாழாக்கி விடும்.
கடமையைப் பற்றி கனவு காணுங்கள்
அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.

* சிக்கல்களை எதிர்கொள்ளும் போது
கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.

* படைத்தவனுக்கு தெரியும் உன்னால்
எவ்வளவு பாரம் சுமக்கமுடியுமென்று
ஆகவே, தளராதே.

* துன்பங்கள் அனுபவித்த காலத்தை
மறந்து விடு. ஆனால், அது
உனக்குக் கற்பித்த பாடத்தை
மறந்து விடாதே.



**M.Thusharika**
12B Arts 2021 batch.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மொழிகள்

1. தொடங்கிய இடத்தை தெரிந்து கொள்.அப்போது தான் முடிக்கும் இடத்தை அறிந்து கொள்ளலாம்.

2. அன்பு என்றும் உன் உள்ளத்திலிருந்தால் அறிவு என்றும் விட்டகலாது.

3. உன் சோம்பேறித்தனம் உன் வெற்றியின் தடைக்கல்லாய் அமையலாம்.

4. உன் அவசரப் பேச்சு உன்னை அனாதரவாக்காமல் பார்த்துக்கொள்.

5. ஒரு தவறை திரும்பத் திரும்பச் செய்வது மடமை. மடமையை திரும்பத் திரும்ப செய்பவன் எப்படி முழு மனிதனாக முடியும்?

6. பிறர் முன் பேசும் வார்த்தையிலும் செய்யும் செயலிலும் எச்சரிக்கையாய் இரு. உன்னை பிறர் எடைபோட்டுக் கொள்வதும் அதுவே.

7. எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம். என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.

8. சிந்திப்பதும் அதை வெளிப்படுத்துவதும் நாமெல்லாம் மனிதர்கள் என்பதன் அடையாளம்.

9. சிந்திப்பதை வெளிப்படுத்தும் உரிமை மறுக்கப்பட்டால் சிறிது காலத்தில் சிந்திப்பதே மறந்துவிடும்.

10. அநியாயத்திற்கு ஆயிரம் வக்கீல்கள் தேவை. அனால், நியாயத்திற்கு கடவுளின் கருணை மட்டும் போதும்.

11. கடவுளை அடைய ஒரே ஒரு வழிதான் உண்டு. அது அவர் செய்வதை நாமும் செய்வது படைப்பது.

12. வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி, அழகான பசி, ஒருமுறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கின்றது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.

14. கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.

15. நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

16. நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.

17. சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலுமுள்ள ஆபத்தைப் பார்க்கிறான்.

18. மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்.

19. உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக் கொடுத்து தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.




**T.Mithushan**
13B Arts 2021 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பு

ஒரு நல்ல நட்புக்கு வயது என்பது
என்றும் தடை இல்லை
காசு பணமும் முக்கியம் இல்லை
கருத்து வேறுபாடு வந்தாலும்
பிரிவு வருவது இல்லை
என்றும் மாறாத குணம்
உரிமையுடன் பழகும் மனம்
இதை விட வேறு ஒன்றும் தேவையில்லை
நட்பு இல்லையெனில்
இந்த உலகில் வாழ்க்கை இல்லை.

# வேண்டும் வரங்கள்

நினைத்தவுடன் மழை
இரவு நேர மெல்லிசை
கள்ளமில்லா சிரிப்பு
பொய்யில்லா நட்பு
மீண்டும் ஒரு பள்ளிப் பருவம்
தோள் சாய தோழி
உயிர் கொடுக்கும் தோழன்
தாய் மடி தூக்கம்
தூக்கத்தில் மரணம்
மரணம் வரை உன் நட்பு

**T. Yathuja**
12B Arts


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றுப் படகு

மாதங்களாக தெருக்களெங்கும் நிசப்தம் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. அதன் துக்கத்தைத் துடைத்து ஆறுதலளிக்க எவரும் முன்வரவில்லை. காக்கிச் சட்டைகள் காவலாய் நிற்க வெண்ணிற உடைகள் வேலியைத் தாண்டி ஆறுதலளித்தக் கொண்டிருந்தன. ஆறுதலளிக்காத பலரையும் ஆறுதலாயிருந்த சிலரையும் கூட தன்னுள் ஈர்த்துக் கொண்டது வலியுடன் அந்த நிசப்தக் கொரோனா!

வைத்தியசாலைகள் எங்கும் தனிமை எனும் வேதாளம். அறைகள் வெவ்வேறாக தொங்கிக் கொண்டிருந்தன. வேதாளங்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்க வெண்புறாக்கள் முள்வேலியடைத்துக் கொண்டிருந்தன. தன் கழுத்திலும் ஒரு வேதாளத்தைக் கட்டிக்கொண்டு தனியறையில் தான் இல்லாமல் தன் குடும்பம் நாளாந்த வேளை உணவிற்கு என்ன செய்கின்றனரோ என எண்ணிபரிதவித்துக் கொண்டிருந்தான் தங்கத்துரை "கவலையே படாதீங்க ஐயா. இன்றோட நீங்க வீட்டுக்குப் போகலாம் உங்களுக்கு கொரோனா "நெகடிவ்" ன்னு ரிப்போர்ட் வந்திடுச்சி நீங்க சந்தோஷமாக உங்க வீட்டுக்கு போங்கய்யா"விடுதலைப் பத்திரத்துடன் கண்களில் புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தான் குமரன். தங்கத்துரையை கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்ட இவன். குமரனின் தந்தையை, தான் ஐந்து வருடங்களுக்கு முன்பாக ஏமாற்றி அவனது விவசாயக் காணியை பறித்துக் கொண்டானோ அந்த ராமசாமியின் மகன் தான் இன்று தங்கத்துரை உயிருடன் இருக்கக் காரணம். தங்கத்துரையின் கண்களிரண்டும் தானே மூடியது.

"ஐயா, தயவு செய்து கொஞ்சம் கால அவகாசம் தாங்கைய்யா என் மவனோட படிப்புக்காக தானுங்கையா எங்களுக்கு சோறு போடுகிற இந்தக் காணிய அடமானம் வைச்சங்கையா. நீங்க இப்படி மூணு மாசத்துக்குள்ள பணத்தக் குடு இல்லன்னா நிலத்தக் குடுன்னு கேக்குறது கொஞ்சமும் நியாயமில்லிங்கையா" கண்கள் நிறைந்த வலியுடன் கெஞ்சிக் கொண்டிருந்தான் ராமசாமி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அதெல்லாம் சரிப்படாது ராமசாமி.உன் புள்ள படிச்சி பெரிய டாக்டராவா ஆகப்போகிறான்? எப்படியும் மாடு மேய்க்கப் போகிறவனுக்கு பணத்த வாரி இருக்கிற உனக்கும் அறிவில்ல உம்ம மவனுக்கும் அறிவில்ல.சீக்கிரமெ காணிய எழுதிக் கொடுத்திட்டு அப்பனும் மவனுமா மாடு மேய்ங்க”

இதுவொன்றையும் யோசிக்காமல் தங்கத்துரையின் கால்களில் விழுந்தான் ராமசாமி “ தயவு செஞ்சி கொஞ்சம் மனசு வைங்கய்யா. எப்படியாவது உங்க பணத்த நான் கட்டிடுறேனுங்கையா ”எதனையும் காதில் வாங்கிக் கொள்ளாது வானத்தில் இல்லாத பறவைகளைப் பார்த்துக் கொண்டு தன் வழி நடந்தான் தங்கத்துரை.

“என்னங்க எப்படியிருக்கிங்க?” “அப்பா வந்துட்டிங்கா”மனைவி மற்றும் குழந்தைகளின் குரல் தங்கத்துரையை மீட்டது. பிள்ளைகளை மகிழ்ச்சியுடன் ஆரத் தழுவிக் கொண்டான். திடீரென ஏதோ ஞாபகம் வந்தவனாக மனைவியை நோக்கினான் “நானில்லாம் எப்படிம்மா பிள்ளைங்கள பார்த்துக்கிட்டா? வீட்டுக்கு தேவையான சாமான்களெல்லாம் எப்படிம்மா கெடச்சிது?” “ராமசாமி வீட்டிலிருந்து தாங்க வீட்டுக்குத் தேவையான எல்லா சாமானும் அனுப்பி வெச்சாங்க “ தங்கத்துரையின் இதயத்தில் இன்னும் ஆழமாக வலி நிறைந்த வடு ஏற்பட்டதை உணர்ந்தான். கண்களில் கண்ணீர் நிறைந்திட கடவுளுக்கு நன்றி சொன்னான். குமரனும் ராமசாமியும்.



**M.A .Aaqila**
12B Arts


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை பெரியார் பொன் மொழிகள்



01. மானமும் அழகும் மனிதனுக்கு அழகு.

2. பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர் நாடி.

3. மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைவன்.

4. விதியை நம்பி மதியை இழக்காதே.

5. மக்களின் ஒழுக்கத்தையும் பழக்கத்தையும் கெடுப்பது மது.

6. மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ் நாள் பணி.

7. பிறருக்கு தொல்லை தராத வாழ்வே ஒழுக்க வாழ்வு.

8. பக்தி என்பது தனிச் சொத்து ஒழுக்கம் என்பது பொதுச் சொத்து.

**A.Sharmjka**
12B Arts
A / L, 2021 Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய எதிரொலிகள் பற்றிய தகவல்கள்

பொருட்களே இல்லாத அறையில் சத்தம் எழும்பி, அதன் எதிரொலியைக் கேட்டு குதுகலித்திருக்கிறீர்களா? எதிரொலி எப்படி ஏற்படுகிறது? ஒலி அலைகள் ஏதேனும் ஒரு பொருள் மீது மோதி, திருப்பி அனுப்பப்படும் போது எதிரொலியானது உண்டாகின்றது.
உலகில் சில இடங்களில் ஏற்படும் சத்தங்கள் மிகவும் அதிசயத்தக்க வகையில் எதிரொலிக்கின்றன. அப்படிப்பட்ட சில எதிரொலிகள் பற்றிய தகவல்கள் இதோ,.......

* இங்கிலாந்தில் ஆக்ஸ் போர்டுஷயர் என்ற இடத்தில் உள்ள பள்ளத்தாக்கில் ஏதேனும் ஒரு சத்தம் எழுந்தால் அது 20 முறை எழுப்பப்படும் அல்லது திரும்பக் கேட்கும்.

* சிலித்தீவில் உள்ள குகையில் தகரத்தை அசைத்தால், அதனால், உண்டாகும் சிறிய சத்தம் பீரங்கியால் தோன்றும் வெடிச்சத்தத்தைப் போல அதிகமாகி விடுகின்றன.

* லண்டனில் உள்ள செயின்டபால் கதீட்ரல் ஆலயத்தின் ஒரு முனையில் நின்று கொண்டு கிசுகிசு வெனப் பேசினால் 30 மீற்றருக்கு அப்பால் உள்ள இன்னொரு முனையில் தெளிவாகக் கேட்கும்.

* மான்டோனா என்ற இடத்தில் ஆற்று வெள்ளத்தின் ஓசை எதிரொலியால் சங்கு ஊதுவது போலவும் கேட்குமாம். பல ஆண்டுகளுக்கு முன்பு இதை பேய், பிசாசுகள் எழுப்பும் சத்தம் என்று நினைத்துப் பயந்துள்ளனர்.

* வேள்ஸ் எனும் இடத்தில் உள்ள இரும்புப் பாலத்தை ஒரு முறை தட்டினால் அதிலிருந்து 576 சத்தங்கள் எழும்புகின்றதாம்.

* சிலி நாட்டில் 30 மீற்றர் உயரமுள்ள ஓர் கட்டிடத்தின் கீழ் அறையில் மூச்சு விட்டாலும் கூடஅந்த ஓசை 36 மீற்றர் உயரத்திலுள்ள மேல் மாடியில் தெளிவாகக் கேட்கின்றதாம்.டயோனீசியஸ் என்ற அரசன் தன் பகைவர்களை இக்கட்டிடத்தில் அடைத்து வைப்பாராம். அவர்கள் ஒருவரோடு ஒருவர் கிசுகிசு வென பேசிக் கொள்வதை மேல் மாடியிலிருந்து கேட்பாராம்.

**A. Sharmika**
12B Arts A/L 2021 Batch.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

அம்மா எனும் சொல்லுக்கு
அழகாக அமைந்திருக்கும்
"அ" தான் முதல் எழுத்து
அவள்பண்போடு வளர்ப்பதிலே
தானாக மாறிவிடும்
பாரிலெங்கும் தலையெழுத்து



பாசமும் நேசமும் பல்கலை ஞானமும்
பரம்பரையால் வருவதில்லை
அம்மா ஊனோடும் உயிரோடும்
ஊட்டி விடும் பாலுக்கு
உலகத்தில் நிகரேயில்லை


"அம்மா" எனும் சொல்லுக்கு
சரியான அர்த்தமதை
யாருமே சொன்னதில்லை
அம்மா போல் ஒரு உயிரொன்றை
இம்மண்ணில் தருவதற்கு
அவளுக்கு நிகராக எவருமே இல்லை

ஈடிணையே இல்லாத
அம்மாவைப் பெறுவதற்கு
இறைவனை வேண்டி நிற்போம்
அவள் வாடினால் நம் வாழ்வும்
வாடிவிடும் என்பதனை
வாழ்நாளில் உணர்ந்து கொள்வோம்

**S. றெபெக்கா**
12B Arts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுளம்புக்கு பிடித்த இரத்தம்

டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்கள் நுளம்புகள் மூலம் பரவுகின்றன. இந்த வகை நுளம்புகள் வீட்டையோ, பொது இடங்களையோ சுற்றியே தேங்கி இருக்கும் நீரில் வாழும் தன்மை கொண்டவை. அதில் இனப்பெருக்கம் செய்து பல்கிப் பெருகி உயிர் வாழ்கின்றன. பொதுவாக நுளம்புகள் அனைவரையும் கடிக்கும். ஆனால், குறிப்பிட்ட இரத்த வகையைக் கொண்டவர்களைத்தான் நுளம்புகள் அதிகம் கடிக்கின்றன என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. நுளம்புகளைப் பொறுத்த வரை இரத்தமே அவற்றுக்கு உணவு. பெண் நுளம்புகள் முட்டையிடுவதற்கும், வளர்ச்சிக்கும் மனிதர்களின் இரத்தத்தில் உள்ள புரதம் தேவையாக இருக்கிறது.

அதிலும் "O" இரத்த வகை கொண்டவர்கள் தான் நுளம்புகளின் முதன்மை தேர்வாக இருக்கிறது. அந்த இரத்த வகையை சேர்ந்தவர்களை குறிவைத்து தாக்குகின்றன. அவர்களின் இரத்தம் தான் நுளம்புகளுக்கு சுவையானதாக இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக "A" இரத்த பிரிவுகளை கொண்டவர்களை நுளம்புகள் ஈர்க்கின்றன. "B" வகை இரத்த பிரிவினரையும் நுளம்புகள் அதிகம் கடிக்கின்றன. பெண் நுளம்பு கள் மட்டும் தான் இரத்தத்தை உறிஞ்சும். ஆண் நுளம்புகள் தாவரங்கள், மரங்களைத்தான் சார்ந்திருக்கும் தன்மை கொண்டவை. ஒரு பெண் நுளம்பின் ஆயுள் சுமார் இரண்டு மாதங்களாகும். ஆண் நுளம்பின் ஆயுள் சுமார் 15 நாட்களாகும்.

ஒவ்வொரு ஆண்டும் 10 லட்சம் பேர் மலேரியா பாதிப்புக்குள்ளாகி இறந்து கொண்டிருக்கிறார்கள். வண்ண ஆடைகளை அணிபவர்கள் எளிதில் நுளம்புகளின் தாக்குதலுக்கு இலக்காகின்றார்கள்.குறிப்பாக நேவிபுளு, கறுப்பு மற்றும் சிவப்பு நிற ஆடைகள் நுளம்புக்கு பரீட்சியமானவை. இரவுப் பொழுதில் நுளம்புகளின் கண்கள் கூர்மையாக இருக்கும் என்பதால் அந்த சமயத்தில் தான் அதிகம் கடிக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுளம்புகள் மனித சுவாசத்தை நுகரும் தன்மை கொண்டவை. 166 அடி தூரத்தில் கூட மனிதர்கள் சுவாசத்தின் போது வெளியிடும் $CO_2$ வாயுவை நுகரக் கூடிய அளவுக்கு புரிதல் கொண்டவை. அதன் வாசத்தை நுகர்வதால் தான் நம்முடைய மூக்கு, காது தலைப் பகுதியைச் சுற்றி நுளம்புகள் வட்டமிடுகின்றன.

$CO_2$ வாயுவைத் தவிர லாக்டிக் அமிலம், யூரிக் அமிலம் மற்றும் அமோனியா ஆகியவை கோடை காலத்தில் வியர்வையின் மூலம் அதிகமாக வெளியேற்றப்படுகின்றன. அவையும் நுளம்புகளுக்கு பிடித்தமானவை.

கடினமாக உழைப்பவர்கள், உடற்பயிற்சி செய்பவர்கள், வெப்பமான பகுதிகளில் வசிப்பவர்கள் அதிக வியர்வையை வெளியேற்றுவதனால் அவர்களை நுளம்புகள் அதிகம் கடிக்கும்.

சாதாரண பெண்களை விட கர்ப்பிணிகள் அதிக அளவு $CO_2$ வாயுவை வெளியிடுகிறார்கள். என்பது ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது அதனாலேயே கர்ப்பிணிப் பெண்களை நுளம்புகள் அதிகம் கடிக்கின்றன. சருமத்தில் நுளம்புகளை ஈர்க்கும் பல வகையான பக்டீரியாக்கள் உள்ளன.

கொசுக்கள் வீட்டுக்குள் நுழைவதை தடுக்க ஜன்னல், கதவுகளில் வலைகளை நிறுவி வைக்கலாம். வீட்டின் உள்பகுதிகளை மட்டுமன்றி சுற்றுப்புற பகுதிகளையும் வாரம் ஒரு முறை சுத்தம் செய்வது நல்லது. வெளிச்சம் தான் நுளம்புகளுக்கு உற்ற துணையாக இருக்கின்றன. அதனால் மாலை, இரவு நேரங்களில் தேவைப்படும் போது மட்டும் அறைகளில் விளக்குகளை எரிய விடுங்கள். நுளம்புகளை விரட்டும் சாதனங்களையும் பயன்படுத்துங்கள். இரவில் படுக்கை அறையில் நுளம்பு வலை நிறுவி தூங்குவது பாதுகாப்பானது. வேப்ப இலைகள், கற்பூரம், பிரியாணி இலைகள் போன்றவற்றை எரிக்கலாம். அதில் இருந்து வெளிப்படும் புகை நுளம்புகளை விரட்டும் தன்மை கொண்டது.

**J.Sujeewa**
12B Arts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்மார்ட்போண் சீக்ரட் கோட்ஸ்

#31# -அவுட்கோயிங் கோல்ஸ்

* #30# -உங்களுடைய எண்ணின் அடையாளத்தை தெரிந்து கொள்ளலாம்
* 3370# -தகவல் தொடர்பு தரத்தை தெரிந்துகொள்ளலாம்
* #5005*7672# -அருகிலுள்ள சேவை மையத்தை காட்டுவதற்கு
* 3001#12345#* -சீக்ரெட் கோட்ஸ் wifi சிக்னல் Battery மற்றும் பிற தகவல்களை கொடுக்கும்
* #*#7780#*#* -Battery செடிங்ஸை போனில் மீண்டும் அமைக்க உதவும்

## பொது அறிவுத் தகவல்

* வினாகிரியில் உள்ள அமிலம் -அசிட்டிக் அமிலம்
* வீட்டின் "ஈ" இன் விலங்கியல் பெயர் -மஸ்காடொமாஸ்டிகோ
* வீணான பொருட்களின் குவியலில் இருந்து இரும்பை பிரித்தெடுக்க பயன்படுவது -மின்காந்தம்
* வெடிமருந்து தயாரிக்க பயன்படுவது -பொட்டாசியம் நைட்ரேட்
* வெப்பத்தை அளவிட பயன்படும் கருவி -வெப்பநிலைமாணி
* அற்றினல் சுரப்பியினால் சுரக்கப்படுவது - அட்ரினலினை
* அற்றினல் சுரப்பியின் மறு பெயர் -சுப்ராரீனரல்
* அணுக்கரு இணைவின் மற்றும் ஒரு பெயர் - வெப்ப உட்கரு வினைகள்
* அணுக்கரு பிளவை கண்டறிந்தவர் - ஆட்டோஹான், ஸ்டார்ஸ்மான்

**R.Kishomiya**
13 Technology
2020 A/L Batch


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தின் மிகப்பழைமையான பத்து மொழிகளின் தரப்படுத்தல்

10 வது இடத்தில் லத்தீன் மொழி (Lattin)

09 வது இடத்தில் ஆர்மேனியன் (Armenian)

08 வது இடத்தில் கொரியன் மொழி (Korian)

07 வது இடத்தில் எபிரேபிய மொழி (Hebrew)

06 வது இடத்தில் அராமிக் மொழி (Aramic)

05 வது இடத்தில் சீன மொழி (Chinese)

04 வது இடத்தில் கிரீக் மொழி (Greek)

03 வது இடத்தில் எகிப்து மொழி (Egyptian)

02 வது இடத்தில் சமஸ்கிருத மொழி (Sanskrit)

01 வது இடத்தில் தமிழ் மொழி (Tamil)

5000 ஆண்டுகளுக்கு மேல் பழமையான மொழி தமிழ்மொழியாகும். இன்றுவரை உயிர்ப்புடன் இருக்கும் பழைய மொழிகளில் தமிழ் முன்னிலையில் உள்ளது.

**ஐ. டிஷார்க்கான்**
பொறியியல் தொழிநுட்பபிரிவு
2020 A/L Batch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இம் மலராக்கத்திற்கு உதவியவர்களுக்கும்,

ஒப்புநோக்கியவர்களுக்கும்,

விழாவில் கலந்து சிறப்பித்த அதிதிகள்,

அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள்,

ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,

மாணவர்கள், பெற்றோர்கள்,

பிரமுகர்கள், மற்றும் எமது மாணவர்களுக்கும்

மனமார்ந்த நன்றிகளைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.






| | |
|---|---|
| சஞ்சிகை | A/L மலர் (கண்ணோட்டம்) |
| வெளியீடு | கமு/கமு/ உவெஸ்லி உயர்தர பாடசாலை |
| பதிப்பு | ஒக்டோபர் 2020 |
| தகவல் ஒழுங்கமைப்பு | திரு. க. ருத்திரமூர்த்தி (பகுதித்தலைவர்) |
| அச்சுப்பதிப்பு | விக்டரி அச்சகம், கல்முனை. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டரி அச்சகம், கல்முனை. 0771597347